Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 26 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 09 (12.11.2005) சனிக்கிழமை இதழ் 43

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field.
உள்நாடு, வெளிநாடு விமான டிக்கெட்டுகளுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

இனந்தெரியாதோரின் சூட்டில் பொலிஸ் கொன்ஸ்டபிள் பலி!

திருநெல்வேலி சந்தையில் சம்பவம்

சம்பவ இடத்தில் பொலிஸார்

யாழ்ப்பாணம்

திருநெல்வேலி சந்தையில் மரக்கறி கொள்வனவு செய்ய வந்திருந்த பொலிஸார் மீது இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ். சேனநாயக்க (வயது 38) என்ற கொன்ஸ்டபிளே உயிரிழந்த வராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். சிறைச்சாலையில் துணிகரம்:

துப்பாக்கியை காட்டி மிரட்டிய இருவர் கைதிகள் இருவரை மீட்டுச் சென்றனர்!

யாழ்ப்பாணம்

யாழ். சிறைச்சாலைக்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்த இரண்டு இளைஞர்கள் - சிறைக் காவலர்களை மிரட்டி - தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு கைதிகளை மீட்டுக்கொண்டு தப்பிச் சென்றனர்.

நேற்றுமாலை இடம்பெற்ற இந்தப் பரபரப்புச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமாலை 4.15 மணியளவில் கைதிகளைப் பார்வையிடும் நேரத்தில் இனந்தெரியாத இளைஞர்கள் இருவர் சிறைச்சாலைக்குள் சென்று, அங்கு காவல் கடமை யில் ஈடுபட்டிருந்த சிறைக்காவலர் ஒருவரை துப் பாக்கியைக் காட்டி மிரட்டி பணயம் வைத்தனர்.

சிறைக்காவலரின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி - இரண்டுமுறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுடன் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இரண்டு கைதிகள் இருக்கும் இடத்துக்கு தம்மை அழைத்துச் செல்லுமாறு கோரினர்.

சிறைக்காவலர்கள் செய்வதறியாது திகைத்து நின்றபோது - இரண்டு கைதிகளையும் மீட்டுக் கொண்டு சிறைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

இரண்டாயிரம் பேர் திரண்ட மாணவர் எழுச்சி மாநாடு!

யாழ்ப்பாணம்

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மாணவர் எழுச்சி மாநாட்டில் சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் பங்கேற்று சிறப்பித்ததுடன் எழுச்சிப் பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 72 உயர்தரப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் பங்கேற்ற இந்த மாணவர் எழுச்சி மாநாடு வட - கிழக்கில் முதல் தடவையாக இடம்பெற்ற நிகழ்வாகும்.

கடந்த பல வருடங்களாக சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்ட முறையில் தமிழ் மாணவர்கள் மீது பிரயோகித்து வந்த அநீதிகளையும், கொடுமைகளையும் மாணவர் அமைப்பு ரீதியாக சர்வ (12 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்கள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகத்தர்களின் கடமை நியமனக் கடிதங்கள் நேற்று இனந்தெரியாத நபர்களால் பண்ணைப் பகுதியில் வைத்து அபகரிக்கப்பட்டன. நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழ். பிரதம தபாலகத்திலிருந்து அல்லைப்பிட்டி தபாலகத்திற்கு ஊழியர் ஒருவர் சைக்கிளில் தபால் பொதியை எடுத்துச்சென்ற போது - மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவரை அச்சுறுத்தி கொட்டடி கடற்கரைக்கு கூட்டிச்சென்றனர். அங்கு அந் (12 ஆம் பக்கம் பார்க்க)

பிரதமர் மகிந்த சென்ற ஹெலி அவசரமாகத் தரையிறக்கம்!

வயலுக்குள் தரையிறங்கிய பிரதமர்

கொழும்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பயணம் செய்த விமானப்படை ஹெலிகொப்டர் சீரற்ற காலநிலையால் அவசர அவசரமாக வயல்வெளியில் தரையிறக்கப் பட்டது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் மேற்கொள்வதற்கு பிரதமர் மகிந்த (12 ஆம் பக்கம் பார்க்க)



முன்னைய கண்காணிப்பு அறிக்கைகளை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை!

ஐரோப்பிய கண்காணிப்பாளர் கவலை

யாழ்ப்பாணம்

முன்னர் நடைபெற்ற மூன்று தேர்தல்களின் போதும் கண்காணிப்பாளர்களாகச் செயற்பட்ட தமது அறிக்கை அரசாங்கத்திற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டபோதும் - அவர்கள் அதில் அக்கறை கொள்ளவில்லை என ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஸ்னகன் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பான தற்போதைய களநிலவரங்களைப் பார்வையிடுவதற்கும், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு நடைமுறையில் எவ்வாறு சாத்தியமாகும் என்பதை அறிந்து கொள்வதற்கும் யாழ். குடாநாட்டுக்கு நேற்று வருகைதந்த குஸ்னகன், பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

ஈ.பி.டி.பியை சேர்ந்த மதனராஜன் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த மாவை சேனாதிராஜா ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் யாழ். தேர்தல் தொகுதி உதவித் தேர்தல் ஆணையாளரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி (12 ஆம் பக்கம் பார்க்க)

தன்னாட்சித் தமிழர் தாயகத்திலேயே சுதந்திரமான கல்வி சாத்தியமாகும்!

மாணவர் எழுச்சி மாநாட்டில் பிரகடனம்

யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய நோக்கிலான இயல்பானதும் - சுதந்திரமானதுமான எமது கல்வித் தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்திலேயே சாத்தியமாகும் என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை அடைவதற்கு தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்றுதிரண்டு செயற்படுவோம் என -

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடை பெற்ற மாணவர் எழுச்சி நிகழ்வில் இரண்டாயிரம் மாணவர்கள் பிரகடனம் செய்தனர்.

இந்தப் பிரகடனத்தில் மேலும் -

தமிழ் மக்கள் தமது தாயகத்தில் நீண்ட கல்விப் பாரம்பரியத்துடன் வாழ்ந்து வருபவர்கள். எத்கைய நிலையிருந்தாலும் தமது சந்ததியின் கல்விக்கே முன்னுரிமை அளித்து வருபவர்கள். இதன் காரணமாக நல்ல விழுமியங்களுடன் ஒழுக்கத்தில் உயர்ந்த நாகரிகமுடைய குடிமக்களாகத் திகழ்பவர்கள்.

பிரகடனம் செய்யும் மாணவர்கள்

அத்துடன் அந்தக் கல்வியையே மூலதனமாகக் கொண்டு தமது வாழ்வை வளமுள்ளதாக அமைத்து வாழ்பவர்கள். சுதந்திரத்திற்கு முற் பட்ட காலத்திலிருந்து இலங்கைத் தீவின் அரச துறைகளில் அதிகளவில் பணிகளைப் பெற்றிருந்ததுடன் உயர் பதவிகளிலும் அவர்களே நிறைந்திருந்தனர்.

1970 களுக்கு முன்னர் இலங்கையில் பல்கலைக்கழகங்களில் அனைத்து பீடங்களிலும் தமிழ் மாணவர்களே பெரும்பான்மையாக இருந்தனர். வெளிநாடுகளில் உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெறவும் சொந்தத் தொழில் முயற்சிகளில் முன்னேறவும் அந்தக் கல்வி அடிப்படையாகவும் அமைந்திருந்தது.

இதனால் இந்தத் தீவில் சமூக பொருளாதார முன்னேற்றம் கொண்ட இனமாக தமிழினம் மிளிர முடிந்தது. தமிழ் மக்கள் பெற்றிருந்த கல்வியறிவானது சுதந்திர உணர்வையும் விடுதலை வேட்கையையும் அவர்களிடத்தே இயல்பாக (1 ஆம் பக்கம் பார்க்க)

Tilko Holidays [Pvt] Ltd.
Jaffna City Hotel
70/6 KKS Road. Jaffna.
TP: 021 222 5969 , Fax: 021 222 7291
E-mail: tilkoholidays@yahoo.com.
குளிரூட்டப்பட்ட அறைகள், பல் அலைவரிசை தொலைக்காட்சி, சுடுநீர் வசதி மற்றும் போக்குவரத்து, தொலைபேசி, இணைய (Internet) வசதிகள். வெளிப்புற கொண்டாட்டங்களுக்கான பூந்தோட்டம், வாகன தரிப்பிட வசதிகளுடன்.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து எமது ஒற்றுமையை வெளிப்படுத்துவோம்!

வடமராட்சி வடக்கு மீனவர் சமாசம் கோரிக்கை

வடமராட்சி

இலங்கையில் கடந்த காலங்களில் சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியின் போது நாம் எதிர் நோக்கிய துன்பதுயரங்களை, இழப்புக்களை மறந்து இன்னொரு ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதன்மூலம் எமக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. இந்நிலையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்து தமிழ் மக்களின் ஒற்றுமையை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்துங்கள்.

இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளால் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்களை நன்கு சிந்திக்கவேண்டிய காலத்தில் வாழ்கின்றோம். சரியான முறையில் மக்களாகிய நீங்கள் சிந்திக்கத் தவறுவீர்களானால் உங்கள் ஒவ்வொருவருடைய அழிவுக்கும் நீங்களே வித்திட்டவர்களாவீர்கள்.

இதற்கு முன்னர் ஆட்சிசெய்த ஜனாதிபதிகளின் காலத்தில் எமது தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களை நாம் மீளவும் சிந்தித்துப் பார்க்கும் போது, மீண்டுமொரு ஜனாதிபதி எமக்குத் தேவையா? ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம். இதனை தமிழ்ச் சமூகம் ஒட்டுமொத்தமாக பகிஷ்கரிக்க வேண்டுகின்றோம்.

சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியிலே நடந்த கொடுமைகள் எல்லாவற்றையும் எங்களுடைய மக்கள் எப்படி மறக்க முடியும்! மீண்டும் ஒரு ஜனாதிபதி எமக்கு வேண்டுமா?

1994இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமிழர்களின் பிரச்சினைகளை நான் தீர்த்துக் கொள்வேன் என வாயார உறுதி மொழிகளை அளித்து பதவிக்கு வந்தவர். இறுதியில் தமிழர்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி செயற்பட்டார்.

இவரது ஆட்சிக் காலத்தில் தமிழர் பிரதேசங்களிலே நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்கள், கடற்படைக் கப்பல்களின் தாக்குதல்கள், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்பட்ட ஷெல், குண்டுத் தாக்குதல்கள், இராணுவச் சிப்பாய்களின் துப்பாக்கிப் பிரயோகம் போன்ற இத்தகைய நட வடிக்கைகளினால் நம் தமிழ்மக்கள் சொல்லொணா துன்பதுயரங்களை அடைந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நாம் ஏற்றுக்கொள்ளலாமா?

ரணில் விக்கிரமசிங்கவுடன் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். ஆனால், இந்த ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. பல போராளிகள் இந்த ஒப்பந்தக் காலத்தில் கடலிலும், தரையிலும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

இயற்கை அனர்த்தம் ஏற்பட்டு எமது மக்கள் சின்னா பின்னப்பட்டு முகாம்களிலே முடங்கியிருந்த பொழுதிலும், சிங்களப்பேரினவாத அரசின் எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. வெளிநாடுகளிலிருந்து சுனாமிப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு பல உதவிகள் கிடைக்கப்பெற்றும் அதனைக்கூட சிங்களஅரசு வழங்குவதற்கு தயாராக இல்லை. இந்த உதவிகள் அனைத்தும் சரியான முறையில் கிடைப்பதற்காக பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்று பொதுக் கட்டமைப்பின் நிலையென்ன? நீதி மன்றத்தால் முடக்கப்பட்டு கிப்பில் போடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அட்டூழியங்கள் சிங்களப் பேரினவாத அரசினால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது தமிழர்களாகிய எங்களுக்கு ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் ஒன்று வேண்டுமா?

எனவே அன்பு உறவுகளே! அத்தேர்தலில் நாம் வாக்களிப்பதால் எமது மக்களுக்கு நாமே படுகுழி தோண்டுவதற்கு உறுதுணையளித்தவர்களாக எமது வரலாற்றில் பதிக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வடமராட்சியில் நடைபெற்ற கருத்தரங்கு!

வடமராட்சி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது வடமராட்சியில் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ள உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான கருத்தமர்வு தேர்தல்கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் ஏற்பாட்டில் கடந்த புதன் கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் - சமாசச் செயலர் க.கூரியகுமாரன் தலைமை வகித்தார். இந்தப் பயிற்சிக் கருத்தமர்வில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட கண்காணிப் பாளர்கள் கலந்து கொண்டு பயிற்சியை நிறைவுசெய்து தமக்குரிய அனுமதிக் கடிதங்களைப் பெற்றுச் சென்றனர்.

இவர்களுக்கான பயிற்சியை பவ்ரல் அமைப்பின் இணைப்பாளர் நிர்மானுஷன் வழங்கினார். இந்தக் கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ள கண்காணிப்பாளர்கள் தேர்தல் தினத்துக்கு முதல்நாள் பிற்பகல் 4 மணிக்கு தமது கடமைகளை பொறுப்பேற்று மறுநாள் மாலை 5.30 மணிக்கு நிறைவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதுடன், அவர்களுக்கான அறிவுறுத்தல்களும் வழங் கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசத்துக்கான தேர்தல் கண்காணிப்பு அலுவலகம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலகத்தில் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

மிதிவெடி அகற்றிய இடங்கள் பொதுமக்களிடம் கையளிப்பு!

யாழ்ப்பாணம்

அளவெட்டியில் மிதிவெடி அகற்றப்பட்ட இரு இடங்கள் பொதுமக்களின் பாவனைக்காக நேற்று கையளிக்கப்பட்டது.

அளவெட்டி தபாலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள இரண்டாயிரத்து 24 சதுரமீற்றர் பரப்பளவு, அளவெட்டி அருணோதயா கல்லூரி சூழலில் அமைந்துள்ள மூவாயிரத்து 324 சதுர மீற்றர் பரப்பளவு நிலமும் மிதிவெடி அகற்றப்பட்டு நேற்று கையளிக்கப்பட்டது. டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் இந்தப் பகுதி களில் மிதிவெடிகளை அகற்றினர்.

இந்த மிதிவெடி அகற்றப்பட்ட பகுதிகள் கையளிக்கும் நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேசசெயலர், கிராமஅலுவலர் மற்றும் கிராமமக்கள் ஆகியோர்கலந்துகொண்டனர்.

விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு!

வடமராட்சி

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வடமராட்சி ஹொக்கி கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வதிரி யங்லயன்ஸ் மைதா னத்தில் கரவெட்டிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ப.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதி நிதிகளும் யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கம், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். அனைத்து வடமராட்சி உடற்கல்வித்துறை ஆசிரியர்களை யும், யாழ்.பல் கலைக்கழக உடற்கல்வித்துறையினரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி ஹொக்கி கழகச் செய லாளர் த.புஸ்பரட்ணம் கேட்டுள்ளார். (12)

ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம்

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபை முன்பள்ளியின் ஆக்கத்திறன் கண்காட்சி நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மாநகரசபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ், யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு வின் உபதலைவர் டொக்டர் எஸ்.சுரேந்திரகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவி

சுதுமலை

சிறுவர் நன்நடத்தை பராமரிப்புத் திணைக்களம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் பெற்றோரை இழந்த 70 சிறுவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 500 ரூபாவை வழங்கி வருவதாக பிரதேசசெயலக சிறுவர் உரிமைஅபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

பெற்றோரை இழந்த - பிரதேச செயலக எல்லைக் குட்பட்ட 13 சிறுவர்களுக்கு ஏற்கனவே ஒருமாதக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன, மிகவிரைவில் 57 சிறுவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட பெற்றோரை இழந்த சிறுவர்களின் கல்விச் செலவாக தொடர்ந்து 8 மாதங்களுக்கு முதல் கட்டமாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (91)

நிறைஞ்சனால் சங்கானை
ஆர்னா, ஸோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த
'ஒரு கல்லூரியின் கதை'
வாழ்க்கையில் மறக்கமுடியாதது கல்லூரி வாழ்க்கை அதை நிகழமாகக் காட்டும் திரைக் காவியம்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
விசேட காட்சியாக ரஜனி, சிவாஜி, அம்பிகா நடித்த
படிக்காதவன் 9.00 மணி (பு.நே)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், ஆர்த்தி அகர்வால், நமீதா, வடிவேலு நடித்த
பம்பரக்கண்ணாலே
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி விஜய் வெடிக்கும்
சிவகாசி
விசேட காட்சி காலை 8.30 மணிக்கு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தசாவதாரம், பரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை: இளையராஜா
கதைவசனம்: பாலுமகேந்திரா
காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

கிளிநொச்சியில் உயர் கற்கை நெறியை கற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு....
கல்வி, தொழில் வாய்ப்புக்களுக்காக பிற மாவட்டங்களுக்கு அலையத் தேவையில்லை.
உங்கள் அருகில் உயர் கற்கைநெறிகள்...
தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் முகாமைத்துவ கல்லூரியினால் GAQ (B.A), B.COM கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
* 2004 இல் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 20.11.2005 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவேண்டும்.
* கற்கை நெறிகள் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் மட்டுமே நடைபெறும்.
* கற்கை நெறிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களே சேர்த்துக்கொள்ளப் படவுள்ளதால் மேலதிக விபரங்களிற்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் முன்கூட்டியே முகாமைத்துவக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நிர்வாகம்,
முகாமைத்துவ கல்லூரி,
கரடிபோக்குச் சந்தி, கிளிநொச்சி.
(C/4825)

பண்டிகையை முன்னிட்டு
விஷேட வெகுமதி
கின்றும் பயணத்தின் உதவியாளன்
DAIDO
52,900.00
CF 90C 4 Gear இன் சிறப்புகள்
எரிபொருள் சிக்கனம்,
குறைந்தளவு தேய்மானம்,
கூடிய உத்தரவாதத்துடன்,
தேவையான அளவு உதிரிப்பாகங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.

MOPED
செரெண்டிப் மோட்டர் ஏன்ரபிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 0112-341580, 0112-341581
பக்ஸ்: 0112-454608 E.mail: zme@slt.lk

இரட்டை வேடம் போடும் சோமவன்ச அமரசிங்க!

சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு

ஜே.வி.பியின் இன்றைய தலைவர் எனக் கூறிக்கொள்ளும் சோமவன்ச அமரசிங்க ஒரு புறத்தில் இராணுவத்தை கலைக்க வேண்டுமெனக் கூறிக்கொண்டு - இன்னொரு புறத்தில் விஜய வீர குறித்து பொய்யான கருத்துக்களைக் கொடுத்து விமர்சித்து வந்ததாக வன்முறைகள் அற்றவிடுதலை அமைப்பின் தலைவரும் ரோஹண விஜேவீரவின் மைத்துனருமான போராசிரியர் சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலக கேட்போர்கூடத்தில்கடந்த புதன்கிழமை ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் ரோஹணவை எனது 17 வயதில் முதல் முதலாக சந்தித்தேன். 1965 ஆம் ஆண்டு முதல் தீவிரமாக ஆலோசித்து 1968 ஆம் ஆண்டில் நாம் இருவரும் சேர்ந்து ஜே.வி.பியை உருவாக்கினோம். நான் 9 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்ததுடன், அங்கு பல கொடுமையான துன்புறுத்தல்களுக்கும் ஆளானேன்.

தேசிய இனப்பிரச்சினையே இன்று நாட்டின் முக்கிய பிரச்சினை ஆகும். இதைப் பணக்கார சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களே ஏற்படுத்தினர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் அனுரபண்டாரநாயக்க ஆகியோரும் தாராளவாத தனவந்த வணிக பிற்போக்குவாத பிரதிநிதிகளாகவேயுள்ளனர்.

இன்று சோமவன்ஸ நாட்டில் இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என்று கூறுகிறார். மறுபுறம் விமல் வீரவன்ச -விஜேவீரவின் கருத்துகளுக்குப் பொய்யான விளக்கங்களைக் கொடுத்து விமர்சனம் செய்கிறார்.

இந்த நாட்டில் முக்கியமாகத் தீர்க்கப்படவேண்டிய ஒன்றாக தேசிய இனப்பிரச்சினை இருக்கின்றது. எம்மைப் போன்றே தமிழ் மக்களும் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று நிம்மதியாக வாழவேண்டும் என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (01)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 11 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 11 தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் கடவுச்சீட்டுக்களோ, விமானப் பயணத்துக்கான பயணச் சீட்டுக்களோ காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல விமானநிலைய அதிகாரிகள் சிலர் உதவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் மாலைதீவுக்குச் செல்லும் விமானத்தில் பயணிக்கவிருந்தபோதே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஐந்து பெண்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் சிவில் விமான சேவை கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

சம்மாந்துறையில் துப்பாக்கிப் பிரயோகம்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு- சம்மாந்துறையில் கடந்த புதன்கிழமை இரவு தமது தேர்தல் பிரசார அலுவலகம் தாக்கப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்- சம்மாந்துறை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயிலும் அவரின் ஆதரவாளர்களும் வந்து தம்மைத் தாக்கியதுடன், பயமுறுத்தும் வகையிலும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரின் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தமது வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (01)

அரச திணைக்கள அதிகாரிகளுடன் கேணல் சொர்ணம் சந்திப்பு!

திருகோணமலை

திருகோணமலை சம்பூரில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனையில் நேற்று முன்தினம் வடக்கு - கிழக்கு அரச திணைக்களங்களின் பணிப்பாளர்களையும், தலைவர்களையும் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



இந்தச் சந்திப்பில் திருகோணமலை நகரின் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் பற்றியும், இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் திருகோணமலை மாவட்டம் புறக்கணிக்கப்படுவது தொடர்பாகவும், உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டம் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.30 தொடக்கம் 12.30 வரையிலான இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இந்தச் சந்திப்பில் 45 இற்கும் மேற்பட்ட பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களும், பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இன்று திருகோணமலையில் இயங்கும் கணினி நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்களையும் திருகோணமலை மாணவர் அமைப்பின் பிரதிநிதிகளையும் தம்மீழ விடுதலைப்புலிகள் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

-மகிந்த ராஜபக்ஷ-

கொழும்பு

போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இப்போது நடைமுறையிலுள்ள போர் நிறுத்த உடன்பாட்டில் வடக்கு முஸ்லிம்களுக்கு அதிக பாதகம் ஏற்பட்டுள்ளதாக கடந்த புதன்கிழமை புத்தளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களைத் தொடர்ந்தும் பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடாது. இந்த நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கையை மீளமைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

மகிந்தவை ஆதரிக்காவிடின் வாக்களிக்கக் கூடாதாம்!

-சோமவன்ச மிரட்டல்-

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க விரும்பாதவர்கள் தேர்தலில் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச - தம்புள்ளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இந்த வேண்டுகோளை விடுத் தார்.

மகிந்தவின் சிந்தனையுடன் இணங்கிச் செல்ல முடியாதவர்கள் வாக்களிப்பதை தவிர்த்துக்கொள்வதே சிறந்தது. மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்க முடியாதவர்கள் வாக்குச்சாவடிகளுக்குச் செல்லவேண்டாம்.

மகிந்த ராஜபக்ஷவே நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கக்கூடியவர். திருகோணமலையில் தேசிய கொடியை ஏற்றியது ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகரவே. மகிந்த ராஜபக்ஷவும் அவருடன் சேர்ந்து இயங்கும் படைகளுமே இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் தேசியக்கொடியை ஏற்றுவர் என சோமவன்ச அமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (01)

யுத்த நிறுத்த மீளாய்வு தொடர்பாக இந்தியாவிடமும் உதவி பெறப்படும்

மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு

ஜனாதிபதியாக தாம் தெரிவு செய்யப்பட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வோம் என்று சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை புத்தளத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில் -

விடுதலைப்புலிகளுடனான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதன் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்ற பெயரில் எதிர்காலத்தில் எந்தவொரு பயங்கரவாதச் செயலும் நடைபெறாமல் தடுக்க முடியும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்கிறபோது - இந்தியா உள்ளிட்ட இந்தப் பிரதேசத்தில் உள்ள நாடுகளின் உதவியை நாம் கோருவோம்.

புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக 50 வீத்தினராக இருந்தபோதும் 30 வீத சிங்களவர் மற்றும் 20 வீத தமிழர்களுடன் மத நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வருகின்றனர். புத்தளத்தைப்போல் இந்த நாடு முழுமையும் ஒரே குடும்பமாக வாழவேண்டும் என்பதே எமது நோக்கம்.

என்னை ஒரு இனவாத முகாமின் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். எனது பாடசாலை நாட்களிலிருந்தே எனக்கு தமிழ், முஸ்லிம் நண்பர்கள் உண்டு. இன்றும் அவர்கள் எனது நண்பர்களாக இருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் அகதிகளுக்கான எந்தவித செயற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் பொதுமக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அமைச்சர்கள் அலவி மௌலானா, பௌசி ஆகியோர் வீடமைப்பு உள்ளிட்ட நிலத்திட்டங்களைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தால் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு நெற்செய்கைகளுக்கு அவர்கள் வரி செலுத்துகின்றனர்.

ஈராக்கில் முஸ்லிம் சமூகத்தினர் மீது குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு வரும் அமெரிக்காவை நியாயப்படுத்துகிறவர் ரணில் விக்கிரமசிங்க பலஸ்தீனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு நாம் ஆதரவு கொடுத்தோம். நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே இருந்த காலத்தில் பாலஸ்தீனத்தின் தலைவர் மறைந்த யசீர் அரபாத் இலங்கை வருகைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டோம்.

எமது அரசியல் இலாபங்களுக்காக முஸ்லிம்களை நாம் ஒருபோதும் காட் டிக்கொடுக்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க சுற்றுலாப் பயணி மீது பாலியல் வல்லுறவு முயற்சி!

கொழும்பு

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் 42 வயதுடைய அமெரிக்கப் பெண் மீது பாலியல் வல்லுறவு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணியான அந்த அமெரிக்கப் பெண்மணி - கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி தனது அறைக்குள் நுழைந்த விடுதியின் ஊழியர் ஒருவர் கழிவறையில் இருந்த பிரச்சினையைச் சரி செய்யச் சென்றார். அப்போது தம்மைக் கீழே தள்ளி தம் மீது பாலியல் வல்லுறவு கொள்ள முயற்சித்தார் என்றும், அதன் பின்னர் உதவிக்கு பொலிஸாரையும், விடுதி ஊழியர்களையும் தாம் அழைத்ததாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

உடலில் ஏற்பட்டிருந்த காயங்களுக்குத் தாம் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், அந்த நபர் இந்திய வம்சாவளியினர் என்றும் அவர் அடையாளம் குறிப்பிட்டுள்ளார். கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பலித சிறிவர்த்தன இது தொடர்பிலான முறைப்பாடு தமக்குக் கிடைத்துள்ளது என்று கூறினார்.

இருப்பினும், இந்த முறைப்பாட்டுக்கான உரிய ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். சர்ச்சைக்குரிய ஹோட்டல் ஊழியரும் இத்தகைய குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

மீடின் கொலையாளியுடன் பொலிஸாருக்கும் தொடர்பு!

கொழும்பு

இராணுவப் புலனாய்வு அதிகாரி கேணல் ரிஸ்லி மீடினைச் சுட்டுக்கொன்ற ஐஸ் மஞ்சுவுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்துவந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் திருகோணமலையில் கைதுசெய்யப்பட்ட ஐஸ் மஞ்சுவின் வர்த்தக நண்பர் ஒருவரே இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ஐஸ் மஞ்சுவுடன் தானும் பொலிஸாருடன் இணைந்து சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் - பொலிஸ் விசாரணையின்போது அந்த நபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்படி வர்த்தகர் கேணல் ரிஸ்லி மீடின் கொலைக்கு முன்பதாக பலமுறை கிரிபத்கொட விலுள்ள ஐஸ் மஞ்சுவின் வீட்டுக்கு வந்து சென்றுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதியமைச்சர் மிரட்டினார்; பொலிஸ் அதிகாரி முறைப்பாடு!

கொழும்பு

பிரதி அமைச்சர் ஒருவர் தன்னை மிரட்டியதாக பூகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தேர்தல் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தியபோது - பிரதி அமைச்சர் தன்னை அச்சுறுத்தியதாகவும், தனது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகவும் பூகொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

தனது முறைப்பாட்டின் ஒரு பிரதியை பேலியகொட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இதனிடையே, வடமத்திய மாகாண முதலமைச்சரின் பாதுகாப்புக்கு இராணுவ உடைக்குச் சமனான உடையணிந்த ஆயுதபாணிக் குழு இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் கீழ் இயங்கும் இந்த ஆயுதக் குழுவினால் நேர்மையான, சுதந்திரமான தேர்தலுக்குத் தடைகள் ஏற்படலாமென அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் முல்டானில் இன்று பலப் பரீட்சை!

முல்டான்

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி முல்டானில் இன்று தொடங்கவுள்ளது.

வோண் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இவ்விரு அணிகளிடையே 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கி 16ஆம் திகதி வரை முல்டானில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் காயம் காரணமாக இங்கிலாந்து அணியின் கப்டன் வோண் ஆடமாட்டார் என்று தெரிகிறது. 2ஆவது போட்டி 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை பைசலாபாத்திலும், 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி முதல் டிசம்பர் 3ஆம் திகதி வரையும் நடைபெறும்.

இவ்விரு அணிகளிடையேயான முதல் ஒருநாள் போட்டி டிசம்பர் 10ஆம் திகதி லாகூரிலும், 2ஆவது போட்டி டிசம்பர் 12ஆம் திகதி லாகூரிலும், 3ஆவது ஆட்டம் 15ஆம் திகதி கராச்சியிலும், 4ஆவது ஆட்டம் 19ஆம் திகதியும், 5ஆவது மற்றும் கடைசி ஆட்டம் 21ஆம் திகதி ராவல் பிண்டியிலும் நடைபெறவுள்ளன.

இங்கிலாந்து அணி, அவுஸ்ரேலியாவுக்கு எதிராகச் சமீபத்தில் நடந்த ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியது. இதன் மூலம் அந்த அணி உலகத் தர வரிசையில் 2ஆவது இடத்தில் உள்ளது. இங்கிலாந்து வலிமையுடன் இருந்தாலும், பாகிஸ்தான் மண்ணில் அந்த அணியால் ஜொலிக்க முடியுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரையில் தற்போது அந்த அணி - துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் குறிப்பிடும்படியாக இல்லை என்பதே உண்மை. எனினும், சொந்த மண்ணில் அந்த அணி ஆடுவதால் விஸ்வரூபம் எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு :

பாகிஸ்தான் அணி -

இன்சமாம் (கப்டன்), சல்மான் பட், சொகைப் மலிக், யுனுஸ்கான், மொகமட் யூசுப், ஹசன் ராசா, கம்ரன் அக்மல், கனேரியா, மொகமட் சமி, நவீட், சபீர் அகமட், அக்தர், முஸ்டாக் அகமட், அப்ரிடி, அசீம் கமல், அர்ஷத் கான்.

இங்கிலாந்து -

மைக்கல் வோண் (கப்டன்), அன்டர்சன், கொலிங்வூட், பிளின்ரொப், அஸ்லே ஜைல்ஸ், ஸ்ரீவ் ஹர்மிசன், ஹொகார்ட், ஜெரைன்ட் ஜோன்ஸ், அலெக்ஸ் ஹூடன், கெவின் பீற்றர்சன், மத்தியூ பிரர், ஸ்ரரஸ், ட்ரெஸ்கொதிக், ஜோன் உடால், பிளாங்கெட், அலஸ்டியர் குக்.

மேரி பியர்ஸ் 500ஆவது வெற்றி

லொஸ் ஏஞ்சல்ஸ்

ரெனிஸில் மூத்த வீராங்கனையான மேரி பியர்ஸ் தனது 500ஆவது வெற்றியைப் பெற்றார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் டபிள்யூ.டி.ஏ. சுற்றுப்பயண சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இரண்டாம் சுற்று - ரௌபின் போட்டிகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. இதில் பிளாக் பிரிவில் இடம்பெற்றுள்ள பிரான்ஸின் மேரி பியர்ஸ், ரஷ்யாவின் எலீனா டெமன்டிவாவை எதிர்த்து விளையாடினார். விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் பியர்ஸ் 6-2, 6-3 என்ற நேர் செட்களில் டெமன்டிவாவை வீழ்த்தினார். இதன் மூலம், பியர்ஸ் ரெனிஸ் அரங்கில் தனது 500ஆவது வெற்றியைப் பெற்றார்.

மற்றொரு போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் 3-6, 6-7 என்ற செட்களில் பிரான்ஸின் அமலி மௌரீஸ்மோவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

தலை மகனுக்கு விருது!

வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் நேற்று அமெரிக்க நாட்டின் சிறந்த குடிமகன்களுக்கான அதிபர் பதக்கம் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் அமெரிக்காவின் முன்னாள் குத்துச் சண்டை வீரர் மொகமட் அலிக்கு அதிபர் ஜோர்ஜ் புஷ் பதக்கம் அணிவித்து கௌரவித்தார்.

இந்திய - இலங்கை அணிகளிடையே வடோதராவில் இன்று கடைசி ஆட்டம்

வடோதரா

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான 7 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் கடைசி ஆட்டம் இன்று வடோதராவில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் இரு அணி வீரர்களும் நேற்றுமுன்தினம் அங்கு சென்றடைந்தனர். நேற்று அவர்கள் தீவிர வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

ராஜ்கோட்டில் நடைபெற்ற 6ஆவது போட்டியில் இந்திய அணியின் கப்டன் ராவிட்டுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த ஆட்டத்தில் ஷேவாக் கப்டனாகச் செயற்பட்டார். இன்றைய ஆட்டத்தில் ராவிட் களமிறங்குவார்.

சச்சினின் பரிசோதனை முறைக்கு நல்ல பலன் கிடைத்துவருகிறது. அவரால் இளம் வீரர்களின் திறமை இந்தத் தொடரில் அதிகம் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

அவர் இளம் பந்து வீச்சாளர்களான ருத்ர பிரதாப் சிங், ஸ்ரீசந்த் ஆகியோரை ஊக்கப்படுத்தி வருகிறார்.

இளம் வீரர்களும் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக ஆர்.பி.சிங் கடந்த ஆட்டத்தில் நேர்த்தியாகப் பந்துவீசி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இலங்கை அணியை நிலைகுலையச் செய்தார்.

இளம் இரத்தங்கள் துடிப்புடன் உள்ளதால், இன்றைய கடைசிப் போட்டியிலும் வாய்ப்பளிக்கப்படும்.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் தொடரை ஏற்கனவே இழந்துவிட்டது. இந்தத் தொடரில் இலங்கை அணியில் உள்ள முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் மிகவும் மோசமாக உள்ளது. இதனால் அந்த அணி விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இலங்கை அணி சிறப்பாக ஆடவேண்டிய நிலையில் உள்ளது. இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்பு அதிகம் காணப்படும்.

வடோதரா ஐ.பி.சி.எல் மைதானம் துடுப்பாட்டத்திற்கு சாதகமான இடம். இங்கு 1996ஆம் ஆண்டு நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் நியூஸிலாந்து 307 ஓட்டங்களைக் குவித்தது. இதுதான் இந்த மைதானத்தின் அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.

இந்தியா 2002ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் 290 ஓட்டங்களைக் குவித்துள்ளது. இதுவே இந்தியா - வடோதரா மைதானத்தில் குவித்த அதிக ஓட்டங்களாகும்.

இந்திய - இலங்கை அணிகளிடையேயான இன்றைய ஆட்டம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இலங்கை டெஸ்ட் அணி; சனத் ஜெயசூரிய நீக்கம்

கொழும்பு

இந்திய அணியுடன் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணியிலிருந்து அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரிய நீக்கப்பட்டுள்ளார்.

100 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 6500 ஓட்டங்களைக் குவித்துள்ள சனத் ஜெயசூரிய, இந்திய அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரில் மோசமாக விளையாடியதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், தோள்பட்டையில் ஏற்பட்ட சிறு காயமே ஜெயசூரியவின் நீக்கத்துக்கு காரணமென இலங்கை கிரிக்கெட் சபை பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை, டிசம்பர் 2ஆம் திகதி சென்னையில் தொடங்கவுள்ள 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடருக்கான இலங்கை அணியில் துணைக் கப்டன் பதவியிலிருந்து மஹெல ஜெயவர்த்தன நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக சமிந்த வாஸ் அந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனாலும் மஹெல டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ளார். அவிஸ்க குணவர்த்தனவும், மலிங்க பண்டாரவும் அணிக்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

சஜீவ வீரக்கோன், சாமர கப்புகெதர ஆகியோர் அணியில் முதன் முறையாக இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை டெஸ்ட் அணி -

மாவன் அத்தபத்து (கப்டன்), சமிந்த வாஸ், மஹெல ஜெயவர்த்தன, குமார் சங்ககார, திலகரட்ண டில்ஷான், உபுல் தரங்க, டிலான் சமரவீர, பர்வேஷ் மஹ்ரூப், டில்ஹார பெர்னாண்டோ, முரளிதரன், அவிஸ்க குணவர்த்தன, லசித் மலிங்க, மலிங்க பண்டார, சஜீவ வீரக்கோன், சாமர கப்புகெதர.

கங்கூலியால் குழப்பம் இல்லை; மனம் திறக்கிறார் ராகுல் ராவிட்!

வடோதரா

கங்கூலியால் இந்திய அணிக்குள் எவ்வித குழப்பமும் இல்லையென இந்திய அணியின் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

கப்டன் பதவி ஏற்றதிலிருந்து இதுவரை மௌனம் சாதித்து வந்த ராவிட் தற்போது முதன் முறையாக மனம் திறந்துள்ளார். வடோதராவில் அவர் கூறியதாவது -

இந்திய அணியில் உள்ள வீரர்கள் தற்போது சரியான முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அணியில் உள்ள அனைத்து வீரர்களும் சிறப்பாக ஆடினால்தான் வெற்றி பெறமுடியும். அவ்வாறே செயற்பட்டு வருகிறோம். பதான், ஆர்.பி.சிங், காம்பீர் ஆகியோர் சிறப்பாக ஆடு கின்றனர்.

கங்கூலி நீக்கப்பட்டதால், கப்டன் பதவி கிடைத்தது. அணியைப் பொறுப்பேற்றுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது. எனக்குக் கொடுக்கப்பட்ட கடமையைச் சரியாகச் செய்து வருகிறேன். கங்கூலியால் அணிக்குள் எந்தவித குழப்பமும் இல்லை.

கப்டன் பதவியிலிருந்து நான் தெரிந்துகொள்ள வேண்டியது அதிகம் உள்ளது. அதற்கு அதிக காலமும் ஆகும். இந்திய வீரர்களுக்கு யார் கப்டன் என்பதும் தெரியும். கப்டன் பதவிக்கு சப்பல் உறுதுணையாக உள்ளார். அவரது அனுபவம் எனக்கு உதவியாக உள்ளது. இவ்வாறு ராவிட் கூறினார்.

விளையாட்டு

தென்னாபிரிக்கத் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிப்பு!

வடோதரா

வடோதரா போட்டி முடிந்ததும், தென்னாபிரிக்க தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்படுமென இந்திய தெரிவுக் குழுத் தலைவர் கிரண் மோரே தெரிவித்தார். இந்தத் தொடருக்கான கப்டனாக ராகுல் ராவிட் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதல் இரண்டு போட்டிக்கான அணி மட்டுமே இன்று அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், இன்று மும்பைக்கு வரும் தென்னாபிரிக்க அணி, எதிர்வரும் 14ஆம் திகதி ஹைதராபாத்தில் பயிற்சிப் போட்டியில் விளையாடவுள்ளது.

இதையடுத்து முதல் ஒருநாள் போட்டி ஹைதராபாத்திலும் (நவம்பர் 16), அடுத்த நான்கு போட்டிகள் பெங்களூர் (நவம்பர் 19), சென்னை (நவம்பர் 22), கொல்கத்தா (நவம்பர் 25), மும்பையிலும் (நவம்பர் 28) நடைபெறவுள்ளன. கடைசி நான்கு போட்டிகள் பகலிரவு ஆட்டமாக நடைபெறும்.

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் சைமன்ஸ்!

சிட்னி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் இருந்து கடிச் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக சைமன்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தர்போல் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இந்த இரண்டு அணிகளுக்குமிடையிலான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில், பிரிஸ்பேனில் நடந்த முதல் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணி 379 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய - மேற்கிந்தியத் தீவு அணிகளிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஹோபார்ட்டில் நடைபெறவுள்ளது. இதற்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சைமன் கடிச் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக அன்ட்ரூ சைமன்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி வீரர்களின் விபரம் வருமாறு -

ரிக்கி பொண்டிங் (கப்டன்), ஹைடன், மைக்கல் ஹசே, மைக்கல் கிளார்க், பிராட் ஹொட்ச், கில்கிறிஸ்ட், சைமன்ஸ், பிரெட் லீ, வோன், பிறாக்கன், மக்ரா, மக்கில்.

தனது சொந்த வேட்டை நாய்களுக்கே இரையாதல்

அசெற்றன் என்பவன் தான் ஒரு வேட்டைக்காரன் என்றும், வேகமாக ஓடுவதில் தன்னைவிட ஒருவருமில்லை யெனவும் பெருமையடித்துத் தனைப் பற்றி உயர்வாக மதிக்கும் ஓர் இளைஞனாவான். காட்டினூடாக மிக வேக மாக ஓடுவதில் வல்லவனாகையால், ஓரிடத்தில் திடீ ரென மறைந்தும் பிறிதோரிடத்தில் திடீரெனத் தோற்றி யும் மாயாவிபோல வேடிக்கை காட்டிவந்தான். வேட்டை யாடுவதற்கும் அவனுக்கு இணையாக அந்த முழு இராச் சியத்திலும் எவருமில்லாதிருந்தனர். அந்த வகையில் சில வேட்டைநாய்களுக்குப் பயிற்சியளிக்கும் வாய்ப்பு அவனை வந்தடைந்தது. அவ்விலங்குகள் தம் எஜமானாருக் காக ஈவிரக்கமற்ற முறையில் மிருகங்களைப் பிடித்தும் கொலை செய்தும் கொண்டுவரத் தலைப்பட்டன.

டயானா என்பவள் ஒரு வன தேவதையாக அந்தக் காடு களில் வலம் வந்து கொண்டிருந்தாள். ஒருநாள் அசெற் றன் காற்றைக் கிழித்துச் செல்வதுபோல் ஓடிக் கொண்டி ருப்பதைக் கண்ட அவள் அதில் மனமகிழ்ந்து மனதில் பதித் துக்கொண்டாள். தானும் அவனுடன் கூடச் சேர்ந்து ஓடு வதற்கும் விரும்பினாள். அவனும் காட்டில் வேறெவ ரும் இல்லாததாலும் அவளுக்கு நண்பர்கள் கிடையா தென்பதாலும் பார்வைக்குத் தென்பட்டும் மறைந்தும் வி ளை யா ட விரும்பினான்.

டயானா தன்னுடன் ஓடு வதற்கு அசெற் றனை அழைத் தாள். அந்த இ ளை ஞனும் பெண் தெய்வம் போன்ற மகிமை வாய்ந்த வன தேவதையுடன் ஓ டு வ தி ல் பெருமகிழ்வுற் றான். இருவ ரும் சேர்ந்து ஓடுவது இரு வருக்கும் புது அனுபவமாகவும் வே டி க் கை யாகவுமிருந் தது! அவர்கள் ஓ டும்போது அசெற்றன் பழக்கிய வேட்டை நாய்களும் பின்தொடர ஆரம்பித்தன. அசெற்றன் முதலில் அவளுடன் பழகும் போது மிகக் கண்ணியமாகவும் அவதானமாகவும் நடந்து கொண்டான். ஆனால் நாட்கள் நகர நகர அவன் செயலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. நாணமற்ற மூர்க்கத்தனமான அவனது செயற்பாடுகள் அவளை வெறுப்படையச் செய்தன.

நான் நினைத்தால் உன்னையே முந்திக்கொண்டு ஓடி விட முடியும். ஆனால் உன்னைப் பின்னால் தள்ளிவிட மனம் வரவில்லை என சில சமயங்களில் அசெற்றன் கூறு வதைக் கேட்டு டயானா எதுவும் பேசாமல் புன்னகை புரி வாள். அப்புன்னகைக்கான உண்மை வேறாக இருந்தது. தெய்வீக சக்தி வாய்ந்தவளென்பதால் அவள் நினைத்தால் மின்னல் ஒளிக்கீற்றைப்போல் பறந்தே செல்லமுடியும். அதற்காக தன் தெய்வீகத் திறமைகளை அவனுக்குக் காண் பிக்கவும் விரும்பாமல் தன் துணையை பக்கபலமாக அவனுக் குக் கொடுத்துவந்தாள். இருந்த போதிலும் தன் அணிகலன்க ளையோ அல்லது தன்னையோ தொட்டுவிடக் கூடாதென்று கடுமையான எச்சரிக்கையைச் செய்திருந்தாள். அ வை க ளை ஏற்றுக் கொண்டு தலையாட்டிய அவன் அவளது ஆ லோ ச னை களை முழுமை யாகக் கருத்தி லெடுக்க மறந்து போனான்.



அ ப் ப டி ஒரு சம்பவம் நேரிட்டது - ஓர் கோடை கால மாலைப் பொழுது.

கா ட் டி ன் மத்தியில் நீரோரி யொன்றிலிருந்து அதைச் சுற்றிலும் மனதை மயக்கி ஆட்கொள்ளவைக் கும் அழகழகான பலவர்ண புஷ்பங்களும் உயர்ந்து வளர்ந்த புற்களும், செடிகளுமிருந்தன. அப்படிப்பட்ட சூழ லின் ஏகாந்தத்தில் திளைத்த டயானா அந்த நீரோரியில் நீராடிக் கொண்டிருந்தாள். மகிழ்ச்சிக் கிளர்ச்சியில் பாட் டொன்றும் பிறந்தது.

இருந்தாலும் அவள் குளிப்பதைப் பார்த்து ஆச்சரி யப் படும் எண்ணத்தில் அவன் இல்லாவிட்டாலும் அந்த நேரம் அந்த இடத்தில் அவனை அவள் எதிர்பார்க்கவில்லை. எதைச் செய்யக்கூடாது என்பதில் சரியாக அவன் இருந் தாலும் தன் வேட்டை நாய்களுடன் ஏரிக்கு அண்மை யில் சென்ற அவன் கல்லொன்றின் மேல் அவளால் கழற்றி வைக்கப்பட்டிருந்த அணி கலன்களைத் தொட்டுப்பார்க் கவும் செய்தான். அவ்வாறே குளித்துக் கொண்டிருந்த டயா னாவைப் பார்த்து அடக்கமுடியாத சிரிப்பையும் உரித்தான்.

டயானா திகைப்படைந்ததில் ஆச்சரியமில்லை. அதை யும்விட பயங்கரமாக ஆத்திரமடைந்தாள். அந்த இளை ஞனை நோக்கிச் சாபமிட்டாள். அந்தச்சாபம் அவனை ஒரு கலைமானாக மாற்றியமைத்தது.

அடுத்து என்ன நடைபெற்றிருக்கும் மென்பதை உங்க ளால் ஊகிக்க முடியுமல்லவா? அவனால் வளர்க்கப் பட்ட, பழக்கப்பட்ட வேட்டைநாய்கள் சடுதியாக அங்கு தோற்றமளித்த கலைமானைக் கண்டவுடன் அதன்மேல் பாய்ந்து கடித்துக் குதறின.

முன்னைய அசெற்றனாக இருந்திருந்தால் ஓடித்தப்பி யிருப்பான். அப்பாவி போன்ற அந்த மிருகத்தால் எது வுமே செய்ய இயலவில்லை. காரணம் மிகத் திறமையாக கொடிய நாய்களாக அவனால் வளர்க்கப்பட்ட வேட்டை நாய்களல்லவா அவை! அவற்றிடமிருந்து எப்படித் தப்புவது?

நிலையானவற்றுக்கும் நிலையற்றவற்றுக்குமிடையி லிருந்த சந்தோஷமான நட்புறவின் முடிவு சோகமாக அமைந்துவிட்டது.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் ஆங்கில மன்றத்தால் நடத்தப்பெற்ற ஆங்கிலதின விழாவின் போது தரம் 01 மாணவர்களால் வழங்கப்பெற்ற கலைநிகழ்ச்சியொன்றின் காட்சியைப் படத்தில் காணலாம்.

துருவன்

அன்பையே பரிசாய் அனைவருக்கும் அளிப்போம்

சிறப்பான நாட்களில்
சிந்தனை வளர்ப்போம்.
அன்பாய் இருந்திட
அனைவரும் முயல்வோம்.
உன்னைப் போலவே
அயலவனை நேசியென்ற
யேசுவின் வார்த்தையின்
உட்பொருள் அறிவோம்.
அன்பாய் இல்லையேல்
அநியாயம் பெருகும்.
அதனால் வாழ்வில்
அழிவே நிகழும்.
கடையில் வாங்கும்
பொருளாய் இராமல்
அன்பையே பரிசாய்
அனைவர்க்கும் அளிப்போம்.
ஆண்டவன் எம்மில்
இருப்பது போலவே
அனைவரின் மீதும்
அன்பாய் இருப்போம்.
போலியை எதிலும்
புறக்கணித் திடுவோம்.
வேண்டாத சொற்களை
வெறுத்தே ஒதுக்குவோம்.
கனிகள் இருந்திடக்
காய்களேன் நமக்கு?
நல்ல வேளையை
நாமே தேடுவோம்.
அதுவாய் எதிர்வரும்
நத்தாரும் ஆகட்டும்!

-கிருபா.

12.11.2005 - சனிக்கிழமை - பக்கம் 06
ஈழநாடு சிறுவர் அரங்கம்

இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இளந்தேனீக்கள் கழகம்

விண்ணப்பம்

முழுப் பெயர் :.....
கற்கும் பாடசாலை :.....
கற்கும் தரம் :.....
வீட்டு முகவரி :.....
பிறந்த திகதி :.....
ஆர்வமுள்ள துறைகள் :.....
:.....

....
திகதி ஒப்பம்

....
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்

பெயர் :- துர்க்கா தேவசகாயம்
தரம் :- 10
பாடசாலை :- யா/வட.இந்து மகளிர் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், கதை வாசித்தல்

பெயர் :- நவிதா பரமானந்ததயாளன்
தரம் :- 06
பாடசாலை :- யா/உடுவில் மகளிர் கல்லூரி
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், நடனம், விளையாட்டு.



பெயர் :- குணபாலசிங்கம் சபேசன்
தரம் :- 07
பாடசாலை :- யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், சதுரங்க விளையாட்டு.

பெயர் :- துஷிந்திகா யோகேஸ்வரன்
தரம் :- 05
பாடசாலை :- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், பாடல், விளையாட்டு.

பெயர் :- ஜீவிதா பரமானந்ததயாளன்
தரம் :- 04
பாடசாலை :- யா/இராமநாதன் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், பாடல், நடனம், விளையாட்டு.

பெயர் :- ஜெகனா பீதாம்பரம்
தரம் :- 07
பாடசாலை :- யா/உடுவில் மகளிர் கல்லூரி.

பெயர் :- தினேஸ்குமார் சிவனேஸ்வரராசா
தரம் :- 09
பாடசாலை :- யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், கணினித்துறை, கிரிக்கெட்.

பெயர் :- ஜெயானந்தன் சுபசோபன்-
தரம் :- 07
பாடசாலை :- யா/நெல்லியடி ம.மகா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பாடல், நடனம்.

பெயர் :- கம்ஷாயினி மகேந்திரம்
தரம் :- 05
பாடசாலை :- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப்புத்தகம் வாசித்தல், ரி.வி பார்த்தல்.

மீனுவின் நண்பர்களைச் சந்திப்போம்

அடங்காப் பிடாரிகளான, நீண்டவாலையும், சவரக் கத்திபோன்ற கூர்மையான பற்களையுமுடைய அது கீச் ஒலியுடன் செல்கிறது... அக்? ஆம் நீங்கள்சொல்வது சரி. அதுதான் அந்த எலி. எலிகளும், சுண்டெலிகளும் இன்னமும் கொறித்துண்ணும் குடும்பத்தின் மற்றொரு அங்கத்தினராகவுள்ளன.



அவை மிகப் பொதுவான கொறிக்கும் பிராணி வகையைச் சேர்ந்தாலும் பிளேக் போன்ற நோய்களைப் பரப்புவதில் காரணகர்த்தாக்களாகவும், அபகீர்த்தி பெற்றவையாகவும் விளங்குகின்றன. இருந்தும், மிகச் சிறியனவாக அவதாரமெடுத்துக் கொண்டிருக்கிறது. சுண்டெலியானது, அவையெல்லாவற்றையும் மாற்றியமைக்கும் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. எம்மிடையேயுள்ள அநேகமானவர் இப்போதும் எலிகள், சுண்டெலிகள் போன்றவற்றைச் செல்லப்பிராணிகளாகவும் வைத்திருக்கின்றனர்.



எலிகளை நாம் அநேகமாக எங்கெங்கும் காணலாம். பழுப்பு மற்றும் கறுப்பு நிறமுடைய எலிகள் மிகவும் பொதுவான இனங்களாக இருக்கின்றன.

எலிகள் மிகத் திறமைவாய்ந்த சுவர், மரமேறிகளாதலால் ஏறும் போது தமது வாலை மூன்றாவது காலாகப் பயன்படுத்துகின்றன. 'பியட் பைபர்' என்பவரது கதையைக் கேட்டிருக்கிறீர்களா? ஹமலின் நகரிலுள்ள எலிகளை ஆற்று நீருக்குள் மூழ்கச் செய்து விடுவித்துள்ளாராம். உண்மை எதுவென்றால்,

எலிகள் நீந்துவதில் திறமைவாய்ந்தவைகளாகவும் ஏறக்குறைய மூன்று நிமிடங்கள் நீருக்கடியில் தங்கக் கூடியவையாகவும் இருப்பதால் இலகுவில் அவற்றை மூழ்கடித்துவிடமுடியாது என்பதாகும்.

மிகுந்த புத்திசாலிகளான எலிகள் அனுபவத்தின் வாயிலாகவும், அவதானிப்பின் மூலமாகவும் பயிற்சி பெற்றிருக்கின்றன. உதாரணமாக, பொறியில் அகப்பட்டு விட்ட இன்னொரு எலியைக் கண்டுவிட்டால் அந்த எலி எதையாவது செய்து, எதுவும் நேராமல் தடுத்துவிடும்.

சில வேளைகள் எலிகள் எமக்குத் தீங்கு விளைவிக்கும் பிராணிகளென நாம் உணர்ந்தாலும், எமது சுற்றாடலில் காணப்படும் அழுக்குகளை உண்டு, சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்க உதவுகின்றன.

நான் பாற்கட்டியில் (Cheese) விருப்பமாயிருக்கிறேன்.



எனக்குக் கொஞ்சம் தருகிறாயா?

ஆம்! கீச் ஒலி செய்யமாட்டேன் என வாக்களித்தால் தருகிறேன்.

புதிரோ... புதிர்...



இந்தச் செவ்வ கத்தை இரண்டு நேர்கோடுகளால் நான்கு பகுதிகளா கப் பிரிக்கவேண்டும். பிரிக்கப்பட்ட ஒவ் வொரு பகுதியிலும் 3 ஒட்டகங்கள் இருந்தால் நீங்கள் கெட்டிக்காரர். எங்கே பாகப்பிரி வினையைத் தொடங்குங்கள் பார்க்கலாம்.

உடையாமல் பாதி முட்டையா?

பூபதியின் பிறந்தநாளுக்கு கேக் செய்வதற்கு முட்டை கள் தேவையாக இருந்தது. முட்டை விற்கும் கிழவியி டம் முட்டை கொண்டுவரும்படி சொல்லியிருந்தான். கிழவியும் முட்டைகளோடு புறப்பட்டாள். பூபதியின் வீட்டுக்குச் செல்வதற்கு 3 வீடுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். முதலாவது வீட்டு வாசலில் நின்ற நாய் கிழவி யைத் துரத்தியது. கிழவி நாயைப் பிடிக்கும்படி கூட நின்ற சிறுவனிடம் வேண்டினாள். "எங்கே போகிறாய் பாட்டி?" என்று சிறுவன் வினவினான். பாட்டியும் விபரத்தைச் சொன்னாள். சிறுவன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டான். "பாட்டி! நீ கொண்டுசெல்வதில் பாதி யும் உடையாமல், பாதிமுட்டையும் தந்தால் நாயைப் பிடித் துக்கொள்கிறேன்" என்றான். கிழவியும் சம்மதித்துக் கொண்டாள். இப்படியே அடுத்த இரண்டு வீட்டு வாசல் களிலும் நடைபெற்றது. பூபதியின் வீட்டு வாசலை அடைந்தபோது கிழவியிடம் ஒரு முட்டையும் இல்லா மல் இருந்தது.

ஆரம்பத்தில் கிழவி எத்தனை முட்டைகளுடன் புறப் பட்டாள் என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

விடுகதைகளும் விடைகளும்

1. சூழச் சூழ முள்ளுக்குத்தி, பச்சை வண்ணப் பட்டு டுத்தி, மூன்றுபேருள் தானொருத்தி என்று சொன் னாள் - யாரவள்?
2. செக்கச் சிவந்தவளாம், செம்பவள நிறத்தவளாம், தேசமெல்லாம் நிறைந்தவளாம், தீண்டமுடியாதவ ளாம் - கண்டீரோ எங்கேனும்?
3. செடியில்லாமல் சிரிக்கும் பூ, காய்க்காமல் கனிந்த பூ, சுவைக்கும் அது முக்கிய பூ - என்னவாய் இருக் கும் அந்தப் பூ?
4. சொன்னதைச் கேட்பேன், சொல்லச் சொல்லக் கேட்பான், திரும்பக் கேட்டால் சொல்லமாட் டான் - அவன் யார்?
5. சொறியனைச் சமைச்சால் சோறெல்லாம் கசப்பு - அவன் யார்?

விடைகள்

1. ஏரீரரயமா 2. ஹெரு 3. ஹரு
4. கிபக 5. ரயடீபயா

ஆசையோடு தேன் சாப்பிடக் காத்திருக்கும் கரடியாருக்குப் பாதை தெரியவில்லையாம். உங்களுக்குத் தெரிந்தால் காட்டுங்கள் பார்க்கலாம்.



இங்குள்ள இரு படங்களிலும் எட்டு வித்தியா சங்கள் உள் ளன. எங்கே கண்டுபிடியுங் கள் பார்க்க லாம்.

உங்கள் கைவண்ணம்

கி.யுகன்
தரம் - 07
யா/கலட்டி றோ.க.த.க.ஆண்கள் பாடசாலை

பு.சுமித்திரா, தரம் - 10
யா/குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

இ.பிரிசங்கர்
தரம் - 04
யா/சென் ஜோன்ஸ் கல்லூரி



அ.மக்லின்
தரம் - 07
யா/கலட்டி றோ.க.த.க.ஆண்கள் பாடசாலை

செ.பிருந்தாபன், தரம் - 03
யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

செ.பிருந்தாபன், தரம் - 03
யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.



கு.பானுறாஜ்
தரம் - 07
யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை.



அசோக்கமலா.சி
தரம் - 11
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

தயானி.அ, தரம் - 05
யா/சென் தோமஸ் பெண்கள் பாடசாலை

12.11.2005 - சனிக்கிழமை - பக்கம் 08
சுடர்நடு சிறுவர் அரங்கம்



நீண்ட காலங்களுக்கு முன் விவேகியும், செல்வந்தருமான வியாபாரியொருவர் இருந்தார். அவர் தன் மாட்டு வண்டிகளில் பொருட்களை ஏற்றி, தூர இடங்களுக்குக் கொண்டு சென்று வியாபாரம் செய்துவந்தார்.



ஒரு நாள் வழமைபோல பயணத்துக்கான பொருட்களைத் தயார்செய்தார்.

அந்த வண்டித்தொடர் பழங்கள் நிறைந்த காட்டினூடாகச் செல்ல வேண்டியிருந்தது.



அறியப்படாத அந்தப் பழங்கள் நச்சுத் தன்மையுள்ளனவாக இருக்கக்கூடுமென்பதே அவர் கருத்தாகும்.



சிலர் மற்றையோருக்கு முன்னால் சென்றிருந்தனர்.



அவர்கள் ஒரு கிராமத்தின் எல்லையிலிருந்து பழுத்துக் குலுங்கிய மரமொன்றின் கீழ் வண்டியை நிறுத்திவிட்டு நின்றனர்.



மாம்பழங்களைப் போன்ற தோற்றத்திலிருந்தாலும் அவை நச்சுத் தன்மையானவையாயிருந்தன.

தங்கள் வியாபாரியின் எச்சரிக்கையை மறந்துவிட்ட சிலர், அந்தப் பழங்களைப் பறித்து உண்ணத் தொடங்கினர்.



விரைவாகவே அவர்கள் நினைவிழந்தார்கள்.

அவர்களின் நண்பர்களும் பீதியடைந்தனர்.

வியாபாரியிடம் அவர்கள் விரைந்தனர்.

அதிஷ்டவசமாக, நச்சுத்தன்மையைச் சுகப்படுத்தும் மருந்தை வியாபாரி தன்னுடன் வைத்திருந்தான்.



விரைவிலேயே அவர்கள் குணமடைந்தனர். அந்தக் குழுவினர் அன்றிரவு அங்கேயே தங்கினர்.



மறுநாள் விடியற்காலை, அவர்கள் சில ஒலிகள் எழுவதைக் கேட்டனர்.



இந்த மனிதர்கள் அயல் கிராமத்திலிருந்து வந்தவர்கள்.

அபகரிப்பதற்கு பயணிகள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பகுதிக்கு விரைந்தனர்.

அவர்கள் யாவரும் நல்லவிதமாக இருப்பதைக் கண்டு திகைத்த திருடர்கள் வந்த வழியே விரைவாகத் திரும்பிவிட்டனர்.

நடைபெற்றதுபற்றி வியாபாரிக்கு நன்கு விளங்கியது.

தங்கள் தலைவருக்கு நன்றிகூறிய அவர்கள் மீண்டும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

மரணம்
என்னை அச்சுறுத்துவது சாவு அல்ல,
செத்துக் கொண்டிருப்பதுதான்.
- மாண்டெயின் -

நமது நோக்கு

மாற்றுவழி ஏதுமில்லை...!

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்கள் எத்தகைய நிலைப்பாட்டினை எடுக்க வேண்டுமென்பது குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தானது நேற்று முன்தினம் அக்கட்சியின் தலைவர் திரு.சம்பந்தன் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையானது தேர்தலுக்கு இன்னமும் ஐந்து நாட்கள் மட்டும் உள்ள நிலையில் முக்கியத்துவம் கொண்ட விடயமாகியுள்ளது.

ஏற்கனவே, தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியான சில தினங்களிலேயே, இது சம்பந்தமான தமது கருத்து நிலைப்பாட்டினை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளரான கு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களப்பதா? இல்லையா? என்ற முடிவை அவர்களே தீர்மானிக்க வேண்டும் எனவும், அதற்கான முழுச்சுதந்திரமும் அவர்களுககு உள்ளது எனவும், தமது சுயசிந்தனையின் அடிப்படையில் யாருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம், எவருக்குமே வாக்களிக்காமல் தேர்தலையே பகிஷ்கரிக்கலாம், என்ற அவர்களின் தீர்மானமெடுக்கும் உரிமை மீது தாம் எத்தகைய அழுத்தங்களையும், கருததியல் வலியுறுத்தல்களையும் மேற்கொள்ளப்போவதல்லை என தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியதன் அர்த்தம்- தமழ் மக்களின் அரசியல் தெளிவுநிலை குறித்தும், இலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்கள் குறித்து அவர்களுக்குள்ள கருத்தியல் தெளிவு தொடர்பாகவும் தமக்கு உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒன்றேயாகும்.

இதுகாலவரை இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை வகித்தவர்களான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச, டிங்கிரிபண்டா விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்ற அனைவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுகளை முன்வைத்தார்கள் என்பது தமிழ் பேசும் மக்கள் அறியாத விடயமேயல்ல.

- யுத்தமா? சமாதானமா? எனத் தமிழ் மக்களை நோக்கி சவால் விட்டார் ஒருவர்.

- பேச்சுவார்த்தை மேசைக்கு வாருங்கள் எனப் புலிகளை அழைத்து ஏமாற்றும் வியூகங்களை வகுத்து பேய்க்காட்ட முனைந்தார் மற்றவர்

-தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று அவமதிததபடி இனப்பிரச்சினையை பயங்கரவாத பிரச்சினை எனக்கூறி உலகை ஏமாற்றினார் அடுத்தவர்.

-சமாதானம்தான் ஒரேவழி என்று கூறிக்கொண்டு, அதனை யுத்தத்தின் மூலம்அடைய சமாதானத்திற்கான யுத்தத்தை தமிழ் மக்கள் மீது திணித்து வரலாறு காணாத துயரத்தை வழங்கித் திருப்திப்பட்டுக் கொண்டதுடன், கடைசியாக சர்வதேச ஆதரவு மற்றும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான முன்னெடுப்புக்களை பேரினவாதிகளுடன் இணைந்து செயலற்று போகச் செய்தார் கடைசியில் உள்ளவர்...

ஆக, இலங்கையில் எந்த சர்வாதிகார வலுக்கொண்ட ஜனாதிபதியிலே இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், உறுதியானதும், தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வில் உரிமைகளை வழங்கக் கூடியதுமான எந்தவொரு தீர்வையும் சமாதான வழிமுறைகளூடாக வழங்கும் ஜனநாயகச் சிந்தனை மிக்கவர்களாக இருக்கவில்லை என்பதே வரலாறு தமிழ் மக்களுக்கு உணர்த்துயுள்ள உண்மையாகும்.

இந்த அடிப்படையில் புதிதாக ஜனாதிபதிக் கதிரையில் அமர போட்டியிட்டு நிற்கும் பிரதான வேட்பாளர்கள் இருவரும் எத்தகைய கொள்கைகளை மக்கள் முன் வைத்திருக்கிறார்கள் என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பான அவர்களின் கொள்கைகள் தமிழ் மக்களை அவர்கள் மீது இம்மியளவேனும் நம்பிக்கை கொள்ள வைப்பதாக இல்லை.

-ஒருவர் ஒற்றையாட்சி முறைக்குள் தீவு என்று உறுமுகிறார்.

- மற்றவர் பிராந்தியசபை மூலம் எனப் புகுக்கரடிவிடுகிறார்.

சாத்தியமற்றதும், தமிழ் மக்களால் எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததுமான கொள்கைகளை முன்வைத்து தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி, ஆயுத முனையில ஒடுக்கி அடிமைப்படுத்த நினைப்போருக்கு வாக்களப்பதானது தமிழ் மக்கள் தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பானதாகும் என சிந்திப்பதில் தவறேதுமிருப்பதாகத் தெரியவில்லை.

இந்தச் சிந்தனைத் தெளிவின் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை காட்டத்தேவையில்லை என்ற அறிவிப்பை விடுத்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை.

ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு சர்வாதிகாரியை தெரிவு செய்யும் வரலாற்றுத் தவறை தமிழ் மக்கள் கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்களித்ததன் மூலம் செய்தமையால் பட்ட அவலங்கள், இழப்புக்கள், அவமதியுககள் மற்றும் நெருக்கடிகள் அனைத்தையும் மீள நினைத்துப் பார்க்கும் எந்த மனித உணர்வு உள்ளவரும் அந்தத் தவறை மீண்டும் செய்யமாட்டார்கள் என்பது நிச்சயமாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

நாடும் நடப்பும்



'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேடுகையில் எங்கள் தலைமையின் புதுமைதெரியும்!

கிழக்குப் பாகிஸ்தானாக இருந்து அடக்கு முறைகளை எதிர்த்துப்போராடி வங்காள தேசமாக விடுதலை பெற்ற நாட்டில் நடைபெறும் "சார்க்" மாநாட்டில் தமது கடைசி நிகழ்ச்சியாக சந்திரிகா அம்மையார் கலந்துகொண்டிருக்கிறார். இலங்கையில் அவருக்கு அடுத்தபடியாகப் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக ஆரவாரமாகப் பிரசாரங்களும் ஏற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வங்காள தேசம் மலர்வதற்கு முன் கிழக்குப் பாகிஸ்தான் இருந்த நிலையில் இலங்கையில் தமிழர் தாயகமான வடக்கும், கிழக்கும் இன்று இருக்கிறது. இப்பொழுது இலங்கையில் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் எந்தவித ஆர்வமோ, ஆரவாரமோ இல்லாமல் அமைதியாகப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். இதுவரை நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் ஜனநாயக முறையில் தமிழ் மக்கள் தமது வாக்குகளை அளித்துத் தமது பிரதிநிதிகளுக்கு வழங்கிய ஆணைகளை சிங்களப் பெரும்பான்மை ஏற்றுக் கொண்டதில்லை. நிராகரித்தே வந்திருக்கிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கும் தங்கள் வாக்குகளைக் கடந்த காலத்தில் வழங்கியும், அந்த வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக வந்தவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றி அக்கறை செலுத்தியதில்லை. இந்தப் புதிய ஜனாதிபதித் தேர்தல் முடிந்து அதிகாரத்துக்கு வரும் புதிய ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு என்ன செய்யப் போகிறார். தீராத பிரச்சினையாக இருந்து வரும் இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண முன்வருவார்? என்று கேட்டுக் கொண்டே நண்பர் பரமசிவம் என்முன் வந்தமர்ந்தார்.

இந்த அதிகாரப் பதவிக்கு வருவதற்காக இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் நிறையவே வாக்குறுதிகளை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு பெரும் கட்சிகளும் இணைந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்று, இருவருமே தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஒற்றையாட்சி அமைப்பில்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்ற சிறிலங்கா மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ சொல்லிவந்திருக்கிறார். ஒற்றையாட்சி அமைப்பிற்குள்தான் தீர்வு என்றும், தமிழர் தாயகப் பிரதேசமோ சுயநிர்ணய உரிமையோ கிடையாது என்றும் அவர் ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் ஒப்பந்தம் செய்திருக்கிறார். அதிகாரப் பரவலாக்கல் என்றும் மஹிந்த தேர்தல் பிரசாரத்தில் சொல்லத் தவறவில்லை.

சமஷ்டி ஆட்சி அமைப்பு மூலம் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கலாம் என்று சொல்லி வந்த ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரத்தில் வகுப்பு வாதம் தலைநிமிர்ந்து வருவது கண்டு "மாகாண சபைகளுக்கும் கூடுதலான அதிகாரம்" தமிழ் மக்களுக்கு வழங்கப்படுமென்று பேசத் தொடங்கினார். இவர்களிருவரும் தேர்தல் முடிந்த பின் ஒருவர் ஜனாதிபதியாகவும், மற்றவர் ஜனாதிபதியாக வெற்றிபெறத் தவறியவர் என்ற முறையிலும் சந்தித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றி எப்போது. எப்படிப் பேசப்போகிறார்கள்? இந்த இருவரும் இவ்வளவு காலமும் அரசியலில் செல்வாக்கில்லாமலோ அதிகாரமில்லாமலோ இருந்தவர்களல்லர். இதுவரை இது பற்றிச் சிந்திக்காதவர்கள், தேர்தல் விஞ்ஞாபனங்கள் தயாரித்து மக்கள் முன் விடுத்தபோது சிந்திக்காதவர்கள் இனித்தான் சிந்தித்துச் செயல்படுத்தப் போகிறார்களா? என்று கேட்டேன்.

இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து பாக்குநீரணையில் இந்தியக் கடற்படை ரோந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும், இந்தத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படவிருப்பதாகவும் இந்தியாவின் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சுரேஷ்மேத்தா தெரிவித்திருக்கிறார். இரண்டு நாடுகளின் மீனவர்களும் தங்கள் எல்லைகளை மீறி மீன்பிடிக்கச் செல்வதால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுப்பதற்காகவே இந்த இரு கடற்படைகளும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகிறதாம். இந்த இருநாட்டு மீனவர்களும் எவ்வளவு சக்திவாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்? இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இருநாட்டுக் கடற்படைகளும் ஈடுபடவேண்டியிருக்கிறது பார்த்தீரா? என்று பரமசிவம் கேட்டார்.

கதிர்காமர் உயிருடன் இருக்கும்போது போட்ட கூச்சலும், இந்தியாவுக்குப் போய் ஓதியதும் இப்போதுதான் செயற்படத் தொடங்கியிருக்கிறது போலும். சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்பவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்னர் இலங்கைக் கடலோரப் பாதுகாப்புப் பற்றிக் கவனம் செலுத்தவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை இந்த இலங்கை - இந்திய கடற்படைகளின் கடற் பிராந்திய ரோந்து நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுவதாகத் தோன்றவில்லையா என்று கேட்டேன்.

ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களும் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறுவது பற்றித் தமது தேர்தல் பிரசாரத்தில் வலியுறுத்திவந்திருக்கின்றனர். சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் அனுசரணையாகச் செயற்படும் நோர்வேயை ஓரங்கட்டி, இந்தியாவை உள்ளே இழுப்பதற்கு ஒரு வேட்பாளர் கோடிகாட்டியிருக்கிறார். மற்றவரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யவேண்டிய அவசியத்தைத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியாகப் புதியவர் பதவியேற்றதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் இந்தியாவின் தலையீடு நிச்சயமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். சங்கரியார் கடைசியாக ஜே.வி.பி செயலர் ரில்வின் சில்வாவுக்கு எழுதிய நீண்ட கடிதத்தில், இலங்கை இன நெருக்கடிக்கு இந்திய பாணியிலான அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் தீர்வொன்றைக் காண்பதற்கு ஆதரவளிக்குமாறு ஜே.வி.பி யினரைக் கேட்டிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இது சம்பந்தமாக முடிவெடுக்குமாறு சங்கரியார் கேட்டிருந்தாலும் இதற்கு ஜே.வி.பிக்கு அவகாசமிருக்காது. இதற்குமுன் ரணிலுக்கும், மஹிந்தவுக்கும்கூட ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் முடிவெடுக்கும்படி மற்றொரு கோரிக்கையையும் சங்கரியார் விடுத்திருந்தார்.

முன்பு அடிக்கடி இந்தியாவுக்குச் சங்கரியார் போய்வந்த போது இந்திய சமஷ்டி பற்றிச் சொல்லிவந்தவர்தான் இந்தியாவிலிருப்பது ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்பே அல்ல என்பது அரசியல் சாஸன ஆய்வாளர்களின் கருத்து என்பது வேறுவிஷயம். நான் இப்போது சொல்லவந்தது ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் எப்படி இந்திய தலையீடு இலங்கைக்குள் வருவதற்குத் தயாராகிறது என்பதை எடுத்துக்காட்டத்தான். 'ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியை புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவர்' அவசர அவசரமாக மேற்கொள்வார் என்றோ வெளிநாடுகளின் தலையீடு இல்லாமல் இதற்குத் தீர்வு காணப்படுமென்றோ யாரும் எதிர்பார்க்கக்கூடாது என்று பரமசிவம் சொன்னார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவது என்றால் இலங்கையில் "அக்கறை" கொண்ட வேறுநாடுகள் சும்மா இருக்குமா? இந்தியத் தலையீட்டினால் இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் விரும்பிய தீர்வு கிடைக்குமா? தமிழ் மக்கள் தமது தாயக பூமியில் சுதந்திரமாக, சுயநிர்ணய உரிமைகளுடன், பாதுகாப்பாக வாழவேண்டுமென்றே பெரும் தியாகங்களைச் செய்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று சொல்லி "கொதிக்கும் பானைக்குள்ளிருந்து பொரிக்கும் சட்டிக்குள் போய் விழுந்துவிட முடியாது" என்று சொன்னேன்.

இந்தியாவென்றாலும் சரி அமெரிக்காவானாலும் சரி அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் இலங்கையின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்வரும்போது அவர்கள் தங்களுடைய நலனையும் இலங்கையில் ஆட்சியிலிருப்போரின் நலனையும் தான் பார்ப்பார்களேதவிர நமது நலனைப்பற்றி அவர்களுக்கு என்ன கவலை. இதுதான் உலக நாடுகளில் நடைபெறும் வழமை. ஆனால் இங்கு எங்கள் தமிழர் தலைமை உலகத்துக்கு வித்தியாசமான, புதுமையான தலைமை. இது உலக வழக்கத்துக்கு வேறுபட்டதாகவே இருக்கும் என்று சொல்லிக் கொண்டு நடந்தார் பரமசிவம்.

ஜனநாயகத்தில் வாக்குரிமை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதேபோல் வாக்களிக்காது விடுவதும் ஜனநாயகமே என்பதைக் காட்டவேண்டும். எமக்கு விருப்பமில்லாத கொள்கைகளையுடையவர்களை நிராகரிக்கும் சுதந்திரம் எமக்குண்டு. எமக்கு பாதகமான கொள்கையுடைய ஒருவரை நிராகரிக்கும் உரிமைஜனநாயகம் என்றால், எமக்குப் பாதகமான இருவரையும் நிராகரிப்பதும் ஜனநாயகமே. ஆகவே, தமிழினம் ஒட்டு மொத்தமாகச் சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து, வாக்களிக்காமல் விடுவது ஜனநாயக வழியில் தமிழினம் தனது அரசியல் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ளும் முறையாகும்.



ஆக்கிரமிப்பாளர்களை நிராகரிக்கும் தேர்தல் புறக்கணிப்பும் ஒரு ஜனநாயக வழிப் போராட்டமே...

வாக்குரிமையைப் பயன்படுத்துவது, தேர்தல் நடத்துவது இவைதான் ஜனநாயகத்தின் பண்புகளாகும். எனவே, வாக்களிக்கும் உரிமையைத் தவறாது பயன்படுத்த வேண்டும் என்று சிலர் கூறிவருகின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த ஜனநாயகக் கோட்பாட்டை ஏற்கக் கூடியவர்களாக இல்லை. ஜனநாயகத்தின் பெயரைப் பாவித்துக் கொண்டு, சிங்கள - பௌத்த இனவாதிகள் தமிழ் மக்களது உரிமைகளை நாடாளுமன்றத்தில் வாக்களித்தே பறித்தனர். அதே நாடாளுமன்றம் அதைவிட அதிகாரம் நிறைந்த நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறைமை தமிழினத்தை ஆளப்படும் இனமாக ஆக்கியது என்பதை எவ்வகை ஜனநாயகம் என்று கூறுவது.

எண்ணிக்கையில் பெரும் சனத்தொகை கொண்ட சிங்கள இனம் தனது பெரும்பான்மை மூலம் சட்டங்களை நிறைவேற்றிவிட்டு, இது ஜனநாயக வரம்புக்குள் நடந்தவைகளே என்று கூறுவதைச் சர்வதேசம் ஏற்றுக்கொள்கின்றதா? இந்தச் சொல்லப்படுகின்ற ஜனநாயக முறை மூலம் மொழி இழந்தான் தமிழன், மண்ணைப் பறிகொடுத்தான் தமிழன், வாழ்வாதாரத்தைப் பறிகொடுத்தான், கல்வியை இழந்தான் தமிழன் இறுதியில் அரசியல் யாப்பு மூலம் நிரந்தர அடிமையாக ஆக்கப்பட்டான். அறவழியில் ஜனநாயக வழியில் தனது எதிர்ப்பைக் காட்டிய தமிழினத்தின் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

அரசாங்க பயங்கரவாதத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தமிழினம் ஆயுதம் எடுக்கவேண்டி ஏற்பட்டது. தமிழினம் தனது ஜனநாயக உரிமைகளை, தனது அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கவே ஆயுதம் எடுத்தது. எனவே, ஆயுதப் போராட்டம் என்பதை ஜனநாயகத்துக்கு எதிரானது எனக் கூறுவது தவறானதாகும். உண்மையில் ஜனநாயகத்தின் பெயரால் பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெற்று, ஜனநாயகத்தை நிலை நாட்ட எடுக்கப்பட்டதே ஆயுதம் ஆகும். ஆனால், இதை ஏற்றுக் கொள்வதில் சர்வதேசம் பின் நிற்கும் என்பது உண்மையே. தமிழ் மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டபொழுது இந்தச் சர்வதேசம் எப்பொழுதாவது குரல் எழுப்பியதா? இல்லையே. இதை உள் நாட்டுப் பிரச்சினை என்று கூறி, வாளா இருந்ததுதான் சர்வதேச சமூகம். ஆயுதப் போராட்ட வளர்ச்சியின் மூலம் இனிமேலும் ஆயுதம் கொண்டு தமிழ் மக்களை அடக்கமுடியாது என்ற யதார்த்தம் தெரிந்த பின்னர், உலக நாடுகள் தமது கண்ணை இந்தப் பக்கம் திருப்பியுள்ளன. இதில் தங்கள் நாடுகள் அமர்ந்த நலனே முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

இதனாலேயே இப்பொழுது நடைபெறவுள்ள சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன? என்பதை உணரவும் மக்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்று அறியவும், அதே நேரம் வாக்குரிமையின் மகத்துவம் பற்றியும் பேசத் தொடங்கியுள்ளனர். இதற்கு ஏற்றாற்போல் சில மதிப்புக்குரியவர்களும் வாக்களிக்கும் உரிமையைவிட்டுவிடக் கூடாதென்றும், எவருக்காவது வாக்களிக்கும் படியும் கூறுகின்றனர்.

இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்தவும், ரணிலும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகவே போட்டியிடுகின்றனர். இவர்களில் ஒருவர் ஒற்றையாட்சியின் கீழும், இன்னொருவர் அரை வேக்காட்டுச் சமஷ்டி மூலமும் வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போகின்றனராம். இவர்களில் எவர் வெற்றி பெற்றாலும் சிங்கள மக்களிடம் கருத்துக் கணிப்புக் கேட்டதன் பின்னர் அவர்கள் வழங்கும் தீர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்குவார்கள். இது ஒரு ஜனநாயக முறை. இந்த ஜனநாயக முறையைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அதனால் தான் இவர்களில் யார் கொஞ்சம் தமிழ் மக்கள்மேல் கரிசனை காட்டுகிறார்களோ அவர்களுக்கு வாக்களிக்கலாம் என்று ஜனநாயகம் பற்றிப் பேசுவோர் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் இன்று நடைமுறையிலிருக்கும் அரசியல் சட்டத்தை என்றைக்குமே ஏற்றவர்களில்லை. இது தயாரிக்கப்பட்டபொழுது அதில் பங்குபற்றவுமில்லை. இது ஒரு வகையில் தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் காட்டிய எதிர்ப்பாகும். இந்த அரசியல் அமைப்புக்குள் எந்தவிதமான தீர்வும் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வழி இல்லை. இதற்குச் சான்று சுனாமிக்குப் பின்னரான கட்டமைப்புக்கு எதிராக சிறிலங்காவின் சிங்கள நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பாகும். எனவே, தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் யாப்புக்குட்பட்டு நடைபெறும் தேர்தல் களத்தில் பங்குபற்றி ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்வது பொருத்தமற்றதாகும் என்பது தமிழ் மக்களின் கருத்தாகும்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெறப்போவது ரணில் அல்லது மகிந்த என்பது தெரிந்த விடயமே. தமிழ் மக்கள் வாக்களிப்பதன் மூலம் மூன்றாவது நபர் ஒருவர் வெற்றிபெறப்போவதுமில்லை. எனவே, இந்தத் தேர்தலில் வாக்களிக்கத்தான் வேண்டும். அந்த உரிமையை விட்டுவிடக் கூடாதென்போர் - ரணிலுக்கு அல்லது மகிந்தவுக்கு வாக்களிக்கும்படி கூறுகின்றனர் என்று தான் கருத வேண்டியுள்ளது. அதாவது, இது வரை எதையெல்லாம் இழந்து எதைப் பெறப்போராடியதோ தமிழினம் அவற்றைப் புறந்தள்ளிவிட்டு வாக்களிக்கும் உரிமையை மட்டும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்கின்றனர். வாக்களிப்பது ஜனநாயக உரிமை என்னும் பொழுது, ஐ.நா அவையிலோ, ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிலோ அல்லது சிறிலங்கா உட்பட உலக நாடுகளின் நாடாளுமன்றங்களிலோ வாக்களிக்காது, நடுவுநிலை வகிப்பது, அல்லது வெளிநடப்புச் செய்வது ஜனநாயக உரிமை அல்ல என்று கூறுவார்களா? ஜனநாயகம் பற்றிப் பேசும் நாடுகள் இவ்வாறு எத்தனை தரம் வாக்களிக்காது இருந்துள்ளன. வாக்களித்தல் என்பது மக்கள் சம்பந்தப்பட்டது, தேர்தல் சம்பந்தப்பட்டது, நாடுகளுக்குப் பொருந்தாதது என்று கூறமுடியுமா? இவ்வாறு கூறுவது மழுப்பல் அல்லவா?

வாக்குரிமையின் மகத்துவம் பற்றிப் பேசுவோர், மக்களின் வாக்குகளைப் பெற்று வென்ற பின்னர் கட்சிமாறுவதை என்னவென்று அழைப்பார்கள். இது அவ்வாறு கட்சிமாறியவரின் ஜனநாக உரிமை என்று கூறுவார்களா? அல்லது போக்கிரித்தனம் என்று ஏற்றுக் கொள்வார்களா? மக்கள் கட்சி அடிப்படையிலேயே வாக்களித்து அவரை வெற்றிகொள்ள வைக்கின்றனர். ஆனால், அவர் வென்றதன் பின் அந்தக் கட்சியை விட்டு விலகுவது மக்களின் வாக்குகளை ஏமாற்றிப் பெற்றதாகக் கருதப்படுவதில்லை. வாக்களித்த மக்களும் ஏமாற்றப்படுகின்றார்கள். அவர் சார்ந்திருந்த கட்சியும் ஏமாற்றப்படுகின்றது. ஆனால், மக்களின் பிரதிநிதி என்று ஏற்றுக்கொள்ளப்படும் ஜனநாயகச் சீரழிவு பற்றி எவரும் அக்கறை கொள்வதில்லை. மாறாக அவ்வாறு கட்சி மாறியமைக்கு கையூட்டாக அமைச்சர் பதவி வழங்கப்படும். கட்சி மாறல் தடைச் சட்டம் இருந்த பொழுது இது சாத்தியப்படாமல் இருந்தது. ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் செ. இராசதுரை கட்சிமாறுவதற்கு வசதியாக அந்தச் சட்டம் திருத்தப்பட்டமை இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும். பொன்னான வாக்கு என்று கூறுவார்கள். அவ்வாறான வாக்குகளைக் கொடுத்த மக்களை மிகச் சுலபமாக அவமதிப்பவர்கள் பற்றி எவரும் கவலைப்படுவதில்லை. ஆனால், வாக்குரிமையைப் பாவிக்க வேண்டும் என்று ஏன் தான் கூக்குரல் இடுகின்றார்களோ தெரியவில்லை. வாக்குரிமை, ஜனநாயகம் என்பதெல்லாம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் மாறுபடும்.

இங்கே தமிழினத்துக்கு விரோதமான கொள்கைகளைக் கொண்ட இருவர் போட்டியிடுகின்றனர். இவர்கள் தமிழர்களுடைய தாயகக் கோட்பாட்டை ஏற்க மறுப்பவர்கள். தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்க மறுப்பவர்கள். தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்க மறுப்பவர்கள். இவர்களில் எவருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும். இவர்களில் எவருக்கு வாக்களித்தாலும் மேற்கூறிய அடிப்படை உரிமைகளை வேண்டாம் என்று வாக்களித்ததற்குச் சமமாகும். இத்தனை ஆண்டுகளாகத் தமிழினம் எது வேண்டும் என்று போராடியதோ அந்த உரிமைகளை ஏற்க மறுப்பவர்களில் ஒருவருக்கு வாக்களிக்க முடியுமா? போராட்டம் வேறு, தேர்தல் வேறு என்று கூறமுடியுமா? எமது இனத்தின் உரிமைகளுக்காகத்தானே அவர்கள் போராடினார்கள், மாவீரர்கள் ஆனார்கள். போராளிகள் போராடிக் கொண்டிருக்கட்டும் நாங்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்ற வாக்களிப்போம் என்று கூறமுடியுமா?

போராட்டத்தையும், அதன் உண்மையான நோக்கத்தையும் ஆராயும் ஒருவன் இதற்குக் சிங்களத்துத் தேர்தலுக்கும் உள்ள தொடர்பை உணர்ந்து கொள்ளமுடியும். தேர்தல் முடிந்ததும் மக்கள் ஆணை கிடைத்துவிட்டது என்று வெற்றி பெற்றவர் கூறுவார். மக்கள் எதற்கெதற்கெல்லாம் வாக்களித்தார்களோ அவை கணக்கில் எடுக்கப்படாது. எத்தனை தில்லுமுல்லுகள் செய்து வாக்குச் சேகரிக்கிறார்கள் என்பது பலரும் அறிந்த இரகசியம். நாட்டின் தலைவராகவரச் சட்டத்தைமீறி, அரசு அதிகாரத்தைப் பாவித்து, ஊடகங்களில் தவறாகப் பரப்புரை செய்து, பணத்தை வாரியிறைத்து, செய்யக்கூடாதனவற்றைச் செய்து, சொல்லக்கூடாதனவற்றைச் சொல்லி வெற்றி பெறுவார்கள். அதற்குப் பெயர் ஜனநாயகம். இவ்வாறு நீதியற்றமுறையில் வெற்றி பெறுபவர் நீதியாக ஆட்சி புரிவாரா என்பதும் ஒரு கேள்வியே. இதன்பின்பு மக்கள் ஆணை கிடைத்துவிட்டது, தமிழ் மக்களும் எனக்கு ஆணை தந்துவிட்டார்கள் என்றுதானே தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களித்தால் கூறுவார்கள். தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரைவேக்காட்டுச் சமஷ்டியை ஏற்றுள்ளார்கள். இராணுவத் தீர்வுமூலம் கௌரவமான சமாதானத்தை ஏற்றுள்ளார்கள் என்று கூறுவார்கள். ஆம் தமிழ்மக்கள் தமிழர் தாயகத்தையோ, சுயநிர்ணய உரிமையையோ கேட்கவில்லை என்று விடுதலைக்கு எதிரானவர்களும் கூக்குரலிடுவார்கள்.

ஜனநாயகத்தின் காவல் நாய்களெனச் சொல்லும் நாடுகளும் இவற்றைக் கூறும். ஆனால், தமிழ் மக்களுக்குள் ஒரே வழி இந்தக் கூற்றுகளைப் பொய்யாக்குவதற்காக ஜனநாயக வழியில் தீர்ப்புக்கூறுவதேயாகும்.

ஜனநாயகத்தில் வாக்குரிமை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதேபோல் வாக்களிக்காது விடுவதும் ஜனநாயகமே என்பதைக் காட்டவேண்டும். எமக்கு விருப்பமில்லாத கொள்கைகளையுடையவர்களை நிராகரிக்கும் சுதந்திரம் எமக்குண்டு. எமக்கு பாதகமான கொள்கையுடைய ஒருவரை நிராகரிக்கும் உரிமை ஜனநாயகம் என்றால், எமக்குப் பாதகமான இருவரையும் நிராகரிப்பதும் ஜனநாயகமே. ஆகவே, தமிழினம் ஒட்டு மொத்தமாகச் சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து, வாக்களிக்காமல் விடுவது ஜனநாயக வழியில் தமிழினம் தனது அரசியல் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளும் முறையாகும்.

சிலர் இந்த முறையை வரவேற்றாலும், கள்ளவாக்குப் போடும் சிங்களத்து ஒட்டுண்ணித் தமிழர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஏராளமான கள்ள வாக்குகளைப் போடுவார்கள் என்று பயப்படுகின்றார்கள். இவர்கள் கள்ள வாக்குப் போடுவார்கள்தான். அதற்காகத்தானோ என்னவோ சிங்களத்திலிருந்து தேர்தல் அதிகாரிகளும் இறக்குமதி செய்யப்படுகின்றார்கள்.

கடைசியாக நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இவ்வாறு கள்ள வாக்குப்போட வாகனங்களில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டவர்களைப் பொதுமக்கள் பல இடங்களில் விரட்டி அடித்ததைக் காண முடிந்தது. ஆனாலும் அவர்கள் கள்ளவாக்குகள் போட்டு ஒரு இடத்தைப் பெற்றார்கள். இவர்கள் கள்ளவாக்குப் போட்டதை வைத்துத் தமிழ் மண்ணில் தேர்தல் சரியாக நடக்கவில்லை என்று ஐரோப்பிய யூனியன் குற்றம் சுமத்தியது. ஆனால், இந்தமுறை அவர்களுக்கு உள்ளது மக்கள் வாக்குப்போட வெளியில் வராமல் இருக்கும்பொழுது எப்படி வாக்குப் பெட்டிகளுக்குள் வாக்குகள் விழுந்தன என்று சொல்லவேண்டிய பொறுப்பு தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு உண்டு. இதிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ளமுடியாது. அவர்களது நீதியான பார்வை எப்படிப்பட்டதென்பதையும் இந்தப் புறக்கணிப்பு வெளிப்படுத்திவிடும்.

இதேநேரம் தென் தமிழீழத்தில் தேர்தல் நாளினைத் துக்க தினமாக மேற்கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறான வேண்டுகோள் பொதுஅமைப்புகளால் விடப்படும் பொழுது வழமையான ஒத்துழைப்புத் தமிழ் மக்களிடமிருந்து வரும். அப்பொழுது கள்ள வாக்குப் போடுபவர்களைத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலகுவில் அடையாளப்படுத்தமுடியும்.

எனவே, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பெற ஜனநாயக வழியில் தேர்தலைப் புறக்கணிப்பது விடுதலைக்கு உரமிடுவதாகவே அமையும்.

பரணி

மாணவர் எழுச்சி மாநாட்டின் காட்சிகள்

தன்னாடசித் தமிழர் தாயகத்திலேயே...

தோற்றுவித்திருந்தது.

சுதந்திரத்துக்குப் பின்னர் வேகம் பெற்ற பௌத்த பேரினவாதம் தமிழர்களை பல வழிகளிலும் ஒடுக்க கங்கணம் கட்டி நின்றது. தமிழர்களின் இருப்பை அழிக்கவேண்டுமானால் அதற்கு அத்திவாரமாக இருக்கும் அவர்களின் கல்வித் தளத்தைச் சிதைக்கவேண்டும் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் சிங்களத் தலைவர்கள் தமிழ்மக்களின் கல்வியைச் சிதைப்பதற்கான பல நடவடிக்கைகளைத்திட்டமிட்டு மேற்கொண்டனர். மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமே எமது அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ்.நூலகம் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் யாவும் சிங்கள அமைச்சர் காமினி திசநாயக்க தலைமையில் சிங்கள காடையர்களால் எரியூட்டப்பட்டன. திட்டமிட்ட கல்விச் சீரழிப்பு நடவடிக்கைகளால் தமிழர்களின் கல்வித்தரம் என்றும் இல்லாதவாறு வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

கல்வித்தரத்தில் முதலிடத்தில் இருந்த யாழ்.மாவட்டம் இன்று பதின்னான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டதுடன் தரப்படுத்தலை எதிர்த்து நின்ற தமிழ் மக்கள் இன்று தரப்படுத்தல் ஊடாக பல்கலைக்கழகத்தில் இடங்களைப் பெற ஏங்கிநிற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் கல்வியை எவ்வாறு இலங்கை அரசு திட்டமிட்டு அழித்து வருகின் றது என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் –

பல ஆயிரக்கணக்கான குடும்பங்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களில் இருந்து இராணுவம் விரட்டியடித்து அகதிகளாக்கி அவர்களின் இயல்பான கல்விச் சூழலைப் பாழாக்கியுள்ளதுடன் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல நூற்றுக்கணக்கான பாடசாலைகளையும் ஆக்கிரமித்துள்ளது.

பாடசாலைகளைக்கூட விட்டுவைக்காது குண்டு வீசித் தகர்த்ததுடன் அவற்றை மீள அமைப்பதற்கு உதவிகள் வழங்காது மாணவர்கள் கூடாரங்களிலும் மரநிழல்களிலும் கற்கும் நிலை காணப்படுதல்.

பாடசாலைகளைச் சுற்றி காவரணங்கள் தடைகள் கெடுபிடிகள் மூலம் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உளவளத்தைப் பாதிக்கச் செய்து, மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கு இடையூறுகள் ஏற்படுத்தி வருதல்.

சிங்கள இராணுவமும் அரசும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் யுத்தபீதியைத் திட்டமிட்டு உருவாக்கி இயல்பான கற்றல் நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவித்துவருதல்.

தமிழ் பாடநூல்களை பொருத்தமற்ற முறையில் உருவாக்குவதுடன் உரிய காலத்தில் பாடநூல்களை தமிழ் மாணவர்களுக்கு வழங்காது இழுத்தடித்து மாணவர்களின் கல்வியடைவில் வீழ்ச்சியை ஏற்படுத்தல்.

தமிழ் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களையும் கற்றல் கற்பித்தல் சாதனங்களையும் போதியளவு வழங்காது புறக்கணித்துவரு தல்.

போதைப்பொருட்கள், நீலப்படம் போன்றவற்றை திட்டமிட்டு மாணவர்களிடையே விநியோகிப்பதன் மூலம் பண்பாட்டு சீரழிவுகளை ஏற்படுத்தல்.

போக்குவரத்து வசதியின்மைகள் தடங்கல்களை ஏற்படுத்துவதன்மூலம் மாணவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தல்.

கல்லூரி அதிபர்களை கொலைசெய்தல், மாணவர்களைக் கைதுசெய்தல் போன்றவற்றின் மூலம் பதற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்து கல்விச்செயற்பாடுகளை முடக்குதல்.

பொருத்தமற்ற கல்விக்கொள்கைகள் நடைமுறைகள் காரணமாக மாணவர்கள் விரக்தியடையும் நிலைக்குத் தள்ளப்படுதல்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் வாழ்க்கையும் கல்வியும் புனரமைக்கப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசு எடுக்காததுடன் பொதுக்கட்டமைப்பையும் முடக்கிவைத்திருத்தல்.

போதியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை. 1000 சிங்கள ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ள அதேவேளை 6000 இற்கு மேற்பட்ட தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோர் உரிய முறையில் நியமனம் செய்யப்படாது கல்வி நிர்வாக நடவடிக்கைகளை பலவீனம் அடையச் செய்வதன் மூலம் தமிழர் கல்வியை பாழடித்தல்.

இந்த நிலையில் தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்றுகூடி பின்வரும் பிரகடனத்தை வெளிப்படுத்துகிறோம்.

பௌத்த – சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் தமிழ்மக்களது கல்விச்செல்வத்தை மறுமலர்ச்சி அடையச் செய்து, தமிழர் தாயகத்தின் சமூக, பொருளாதார பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் அதேவேளை – சர்வதேச அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையிலான கல்விச்செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல தமிழ்மாணவர்களாகிய நாம் உறுதிபூணுகிறோம். தமிழ்த் தேசிய நோக்கிலான இயல்பானதும் சுதந்திரமானதுமான எமது கல்வியானது, தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்திலேயே சாத்தியமாகும் என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை அடைவதற்கு தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்றுதிரண்டு செயற்படுவோம் என பிரகடனப்படுத்துகிறோம்.

'மாணவர் சக்தி மாபெரும் சக்தி' என இந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகப் பகுதியில் கடற்படையினரின் ஒத்திகை!

கொழும்பு

கொழும்பு துறைமுகம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நேற்று முன்தினம் பாரிய ஒத்திகைப் பயிற்சியில் கடற்படையினர் ஈடுபட்டனர்.

துறைமுகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் மாதாந்த ஒத்திகையாக இது திட்டமிடப்பட்டிருந்ததாக கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான ரங்கல கடற்படை முகாம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஒத்திகையின் போது நூற்றுக்கும் மேற்பட்ட கடற்படையினர், மோப்ப நாய்கள், மோட்டார் சைக்கிள்கள், அம்புலன்ஸ்கள், குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர், ரோந்துப் படகுச் சேவையினர், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்கள், கொள்கலன் சாலைகள், களஞ்சியங்கள், கப்பல் கட்டும் வேலைத்தளம் உட்பட முக்கிய கட்டடத் தொகுதிகளிலிருந்து அல்லது உள்ளக பகுதி, வெளிச்சுற்றாடல், மற்றும் கப்பல் ரோந்துப் பகுதிகள் ஊடாக திடீரென மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முறியடிப்பது தொடர்பாகவே இந்த ஒத்திகை இடம்பெற்றது.

இதேவேளை, துறைமுக ஊழியர்களை உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது, அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற செயற்திட்டங்களும் செய்துகாட்டப்பட்டன.

துறைமுக சுற்று மதில் பகுதியை அண்மித்த போக்குவரத்துப் பாதையில் பொ மக்கள் பயணங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வாகனப் போக்குவரத்து சில நிமிடங்கள் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். கடற்படையினரின் இந்த ஒத்திகை நடவடிக்கையின்போது, கொழும்பு கோட்டையில் இருந்து முகத்துவாரம் வரையிலான பகுதிக்குள் அமைக்கப்பட்டிருக்கும் துறைமுக சுற்றுவேலி பகுதி பலத்த பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் திடீர் தாக்குதல் ஒன்றை முறியடிக்க கடற்படையினரை துறைமுகத்துக்குள் உஷார் நிலையில் வைத்திருக்க இவ்வாறான ஒத்திகை நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று எந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(01)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

இரண்டு தசாப்தகால யுத்தத்தால் தீர்க்கமான வெற்றி கிட்டவில்லை!

மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க

கொழும்பு

இலங்கை இராணுவத்தை விட்டு 45 ஆயிரம் படையினர் தப்பியோடியிருப்பதாகவும் - ஜெயசிக்குறு நடவடிக்கைப் படையினர் மூன்றே நாட்களில் மாங்குளம், ஒட்டுசுட்டான் பகுதிகளை விட்டு ஓடும் நிலை ஏற்பட்டதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாதென்றும் முன்னாள் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்கட்சித் தலைவரின் இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் -

1999 நவம்பர் முதலாம் திகதியை நினைவுபடுத்திப் பார்க்கின்றபோது யுத்த களத்தை விட்டு பெறுமதியான உடைமைகளைக் கைவிட்டு படையினர் தப்பியோடியதுதான் ஞாபகத்துக்கு வருகிறது.

ஜெயசிக்குறு நடவடிக்கைப் படையினர் மூன்றே நாட்களில் ஓட்டுசுட்டான், மாங்குளம் பகுதிகளைக் கைவிட்டுவிட்டு தப்பியோடினர்.

இரண்டு தசாப்தகால யுத்தத்தில் இரண்டு எவருக்குமே தீர்க்கமான வெற்றி கிடைக்கவில்லை. இந்தக் காலத்தில் 45 ஆயிரம் படையினர் படைகளைவிட்டு தப்பி ஓடியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் -

பிரிந்து செல்கக்கூடிய வகையுள்ள நாடுகளை சமஷ்டி முறையிலான அதிகாரப்பரவலாக்கல் மூலமே ஒன்றிணைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

நாட்டில் இரண்டு பிரதான அரசியற் கட்சிகளுள் அதிகாரப் பரவலாக்கல் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென்று நம்பிக்கை கொண்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டு நாட்டை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுத்தார்.

சமஷ்டி முறையிலான தீர்வையே ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். ஆளும் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடுகளிலிருந்து விலகி அடிப்படைவாதக் கொள்கைகள் உடைய சக்திகளுடன் கை கோர்த்திருக்கிறார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ரணிலும் குண்டு துளைக்காத கூண்டுக்குள்!



கொழும்பில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க குண்டுதுளைக்காத கண்ணாடிக்கூண்டுக்குள் நின்று உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

நெடுந்தீவு கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு!

நெடுந்தீவு

நெடுந்தீவு கிழக்கு அந்தோனியார் ஆலய கடற்கரைப் பகுதியில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண்ணின சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கியது.

அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் வழங்கிய தகவலையடுத்து நேற்று நண்பகல் மீட்கப்பட்ட இந்தச் சடலம் பொலிஸாரின் உதவியுடன் ப.நோ.கூ சங்கப் படகு மூலம் எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனைக்காகவும் அடையாளம் காண்பதற்காகவும் யாழ்.வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தில் பஸ் விபத்து; ஒருவர் பலி, 14 பேர் காயம்!

கொழும்பு

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் தில்லையடிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன், மேலும் 14 பேர் காயமடைந்த நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ் - நீர்கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றுடன் நேருக்குநேராக மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(01)

கிளைமோர் குண்டு பொலிஸாரால் மீட்பு!

அம்பாறை

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டரை கிலோ எடை கொண்ட கிளைமோர் குண்டு ஒன்றை பொலிஸார் நேற்று கைப்பற்றினர்.

கிராய்க்கேணி பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த கிளைமோர் குண்டு விசேட அதிரடிப்படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம்!

யாழ்ப்பாணம்

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிரந்தர நியமனக் கடிதம் கிடைக்காத பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி பட்டச்சான்றிதழ், சிறப்பு சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், இரண்டுபோரின் நற்சான்றிதழுடன் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு வருகை தருவதன் மூலம் நிரந்தர நியமனங்களுக்கான கடிதங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் த.மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

மீடகப்பட்ட கைக்குண்டு நீதிமன்றில் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்

யாழ்.சிறிதர் தியேட்ரில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தின் பின்புறமாக அமைந்துள்ள நான்காவது காவலரண் பகுதியில் மீட்கப்பட்ட கைக்குண்டு ஒன்றை பொலிஸார் நேற்று யாழ்.நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் குறிப்பிட்ட காவலரண் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டதாகவும், வெடிக்காத நிலையில் அது மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தொடுத்த வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் விக்னராஜா -

இந்தக் குண்டை 512 ஆவது படைப்பிரிவின் குண்டு செயலிழக்கும் படைப்பிரிவினரைக் கொண்டு வெடிக்கவைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

ஜனாதிபதித்...

தத் தபால் பொதியைப் பிரித்து தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் கடமை நியமனங்களை மாத்திரம் பறித்துவிட்டு தபால்பொதியை எடுத்துச்செல்ல அனுமதித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

பிரதமர்...

ராஜபக்ஷ நேற்று அம்பாறைக்குச் சென்றார்.

விமானப்படை ஹெலியில் பயணம் செய்துகொண்டிருந்தபோது, கடும் மழை காரணமாக ஹெலிகொப்டர் இரத்தினபுரி மாவட்டத்துள்ள ஹல்கமுவ வயல்வெளிப் பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

எனினும், இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. அந்தப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த மகிந்த ராஜபக்ஷ காலநிலை சீரடைந்த பின்னரே பயணத்தைத் தொடர்ந்தார்.

இவர் கல்முனையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பு அறிவிப்பால் பங்குச் சந்தையில் சரிவு!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை செலுத்த வேண்டியதில்லை என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிவித்ததால், கொழும்பு பங்குச்சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என்று வர்த்தக சமூகத்தினர் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் கூட்டமைப்பினர் வெளியிட்ட அறிவிப்பால் பங்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டதாக வர்த்தக நோக்கர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

கொழும்பு அனைத்து பங்கு வர்த்தகச் சுட்டெண் 0.42 வீதம் சரிந்தது. முன்னைய நாள் சுட்டெண்ணைவிட 29 புள்ளிகள் சரிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னைய கண்காணிப்பு...

எல்லையிலிருந்து உட்புறமாக ஒரு கிலோமீற்றர் தூரத்திலேயே வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவேண்டும் என்ற உத்தரவு, மக்கள் மத்தியில் தேர்தலில் இருந்த ஆர்வத்தைக் குறைக்கும் - சோர்வை ஏற்படுத்தும் எனக் கருத்துக்கள் வெளியாகியிருக்கின்றன.

எது எவ்வாறாயினும் தேர்தல் நிறைவுபெறும் வரை கருத்து எதனையும் கூறமுடியாது என்றும் மேற்படி வாக்களிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடத்திற்கு விசேட பஸ் சேவை மேற்கொள்ளப்படவேண்டும் என தேர்தல் ஆணையாளரிடம் கோரியபோது அவர் உறுதியளித்ததாகவும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதும் வாக்காளர்கள் எந்தத் தடைகளும் இன்றி வாக்களிப்பதை கண்காணிப்பதே தமது பணியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இனந்தெரியாதோரின்...

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸார் சிவில் உடையில் திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகளை கொள்வனவு செய்துகொண்டிருந்தபோது - பொலிஸாருக்கு நெருக்கமாக வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் சேனநாயக்க என்ற கொன்ஸ்டபிள் வயிறு மற்றும் முதுகுப் பகுதிகளில் ரவைகள் துளைத்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் - சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து திருநெல்வேலி சந்தை மற்றும் அதை அண்டிய பகுதிகளிலுள்ள கடைகள் மூடப்பட்டு, அந்தப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

அத்துடன், படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டதுடன், சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இரண்டாயிரம் பேர் திரண்ட...

தேசத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. இந்த நிலையிலேயே நேற்று இரண்டாயிரம் மாணவர்கள் ஒன்றுகூடி மாணவர் எழுச்சி மாநாட்டை நடத்தினர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி தனபாலன், ஆனைக்கோட்டை உயரப்புலம் மகா வித்தியாலய அதிபர் ரேணுகா தேவி சண்முகரத்தினம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியை யாழ். மத்திய கல்லூரி மாணவன் சி.ரங்கேஸ்வரன் ஏற்றினார்.

தொடர்ந்து வரவேற்புரையை தமிழ் மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த கே.ஜனகன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் தேவராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ.கஜேந்திரன், சிவனேசன் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள காரணிகளும், தமிழ் மாணவர்களின் களநிலையும் என்ற தொனிப்பொருளில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் நவராஜாம், பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் துரோகம் என்ற தொனிப்பொருளில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜியரூபனும், தமிழ் பாடத்திட்டத்தில் மறைக்கப்படுபவையும் நீக்கப்படுபவையும் என்ற தலைப்பில் கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி தனபாலனும், இலங்கையின் கல்விக் கொள்கையில் உள்ள குறைபாடுகள் என்ற தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சந்திரகுமாரும், தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையும் மாணவரைப் பாதிக்கும் விதமும் என்ற தலைப்பில் தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலனும், சுனாமியும் மாணவர்களும் என்ற தலைப்பில் பேராசிரியர் சண்முகலிங்கமும் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து எழுச்சிப்பிரகடனத்தை தமிழ் மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஜனகன் வெளியிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராய ஐந்து குழுக்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டனர்.

இந்தக் குழுக்கள் பற்றிய விளக்கத்தை தமிழ் மாணவர் ஒன்றிய பிரதம ஆலோசகர் இளம்பிறையன் வழங்கினார்.

பிற்பகல் 4 மணியளவில் இந்த மாணவர் எழுச்சி மாநாடு நிறைவு பெற்றது.

துப்பாக்கியை காட்டி...

சாலைக்கு வெளியே சென்ற இனந்தெரியாத இளைஞர்கள் - சிறைக் காவலரை கைவிட்டுவிட்டு 2 மோட்டார் சைக்கிள்களில் ஏறித்தப்பிச் சென்றனர்.

இதனையடுத்து மேற்படி விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதும் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் நேற்றுமாலை வரை கைதுசெய்யப்படவில்லை. கைதிகள் தப்பிச்சென்ற யாழ். சிறைச்சாலைக்கு அண்மையில் இராணுவக் காவலரண் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தையடுத்து யாழ். சிறைச் சாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்ற இரு கைதிகளும் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதகல் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயத்தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாக கடந்த செப்ரெம்பர் 20 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட மணானன் என்ற இராமசாமி சுரேந்திரனும் - வடமராட்சி கடற்பரப்பில் செப்ரெம்பர் 16 ஆம் திகதி கைதான கமல் என்ற கணேஷ் கமலநாதனுமே தப்பிச் சென்றவர்களாவர்.

இவர்கள் மீது மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களில் பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.26, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தீவக வலயதில் பெற்றோருக்கான விழிப்பூட்டல் வீடியோ படக்காட்சி

வேலணை

பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்கண்டு அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்களை வீடு வீடாகச் சந்தித்து கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், பாடசாலை செல்லவேண்டியதன் அவசியம் பற்றியும் பிள்ளைகள் மனஅழுத்தத்துக்குட்படாதிருத் தலைஉறுதிசெய்வதன் அவசியம் குறித்தும் கல்வி பிள்ளைகளின் அடிப்படை உரிமை என்பது பற்றியும், பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் சிறுவர் உரிமை மீறல் என்பது பற்றியும் விளக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட வீடியோப் படக்காட்சி பன்னிரண்டு கிராமங்களில் காண்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.

கல்வியின் முக்கியத்துவம் பற்றி பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் காரைநகர் பிரதேசத்தில் ஊரிக் கிராமம், பாலாவோடை, களபூமி, தோப்புக்காடு கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான பெற்றோர் கலந்து கொண்டு விளக்கம் பெற்றுள்ளனர்.

இங்கு பதினைந்து பிள்ளைகள் இனங்காணப்பட்டு இவர்களுக்கான மாலைநேர வகுப்பை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காரை சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தில் நடத்துவதற்குத் தீமானிக்கப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேசத்தின் மண்கும்பான், அல்லைப்பிட்டி மக்களுக்கான சந்திப்பும், கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.

பெற்றோருக்கும் வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இவர்களுக்கான கற்றல் நிலையம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் அதே தினத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் வேலணைப் பிரதேசத்தின் துறையூர், கண்ணாபுரம், வேலணைமேற்கு, அம்பிகைநகர் பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வு வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது. இங்கு பாடசாலைசெல்லாத நான்கு பிள்ளைகள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களை உரிய பாடசாலையில் இணைக்க ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

மேலும் பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வு, வீடியோ படக்காட்சி ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் -நாரந்தனை வடக்கு, தம்பாட்டி, ஊர்காவற்துறை மையப்பகுதி, கரம்பொன் கிழக்கு, கரம்பொன் மேற்கு பகுதியில் வாழும் பெற்றோர்களுக்குக் காண்பிக்கப்படவுள்ளது. இதனை தீவக கல்வி வலயத்தின் முறைசாரா உதவிக் கல்விப்பணிப்பாளரும், யுனிசெப்பின் வலய இணைப்பாளருமான க.கணபதி செயற்படுத்தவுள்ளார்.

அராலி சிவன் கோவிலில் திருட்டு

உடுவில்

அராலி வண்ணப்புரம் சிவன் கோவிலில் கடந்த வியாழக்கிழமை இரவு மழை பெய்து கொண்டிருந்தவேளை திருடர்கள் சென்று பெறுமதி மிக்க பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

மூல மூர்த்தியாகிய சிவலிங்கம், அம்மன் சிலைகளை பெயர்த்து அதன் அடியிலிருந்த சுமார் ஒன்றரைப் பவுண் இயந்திரக் கட்டையையும், மறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த சுவாமிக்கு அணியும் 15 பவுண் சங்கிலியையும், ஒலிபெருக்கிச் சாதனங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுப் பற்றி வட்டுக் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (101)

மக்கள் கருத்திட்ட நிதியிலிருந்து வேலைத் திட்டங்கள் ஆரம்பம்!

நெடுந்தீவு

சமுர்த்தி அதிகார சபையின் மக்கள் கருத்திட்ட நிதியின் கீழ் நெடுந்தீவுப் பிரதேசத்தில் சுமார் 80 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வேலைத்திட்டமும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியில் ஜே/01, ஜே/03, ஜே/05, ஜே/06 ஆகிய பிரிவுகளில் முறையே சாந்தன் கிணறு திருத்தம், காளாமுனை வீதி திருத்தம், மரகதமொழியாள் வீதி திருத்தம், அந்தோனியார் ஆலய முன் பொதுக்கிணறு திருத்தம் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (113)

சுனாமி நிவாரண முத்திரைக்கு பொருட்கள் வழங்கப்படவில்லை

நவிண்டில்

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சுனாமி நிவாரணத்துக்குரிய 17, 19 இலக்க புள்ளிகளுக்கு முழுமையாக நிவாரணப் பொருட்களை வழங்கவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த புள்ளிகளுக்கான தலா 350 ரூபாவுக்கு பதிலாக 65 ரூபாவுக்குரிய உணவுப் பொருளாக சீனி, பருப்பு, எண்ணெய் மட்டுமே வழங்கப்பட்டதெனத் தெரியவருகிறது.

இதற்குரிய முழுமையான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை யென்றும், இந்தச் சம்பவம் நடைபெற்று 5 மாதமாகியும் மீதி உணவுப் பொருட்களைக் கொடுப்பதற்குச் சங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை யென்றும் தெரிய வந்துள்ளது.

சங்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் குறையைத் தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித பலனும் கிடைக்காததால் நிவாரணம் பெறும் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். (116)

சமுர்த்தி முத்திரைகள் விநியோகிக்கப்படும் உலருணவு பொருட்கள் வழங்கப்படவில்லை

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சுமார் 450 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்படும், அதற்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படாமையால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக உணவு முத்திரை வழங்கப்பட்ட போதும், இன்று வரைக்கும் உணவுப் பொருள் விநியோகம் இடம்பெறவில்லை. இடம்பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்பட்டதன் பின்னர் இவ்வறுமை நிவாரண முத்திரை வழங்கப்பட்டபோதும், அதற்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படாமையால் வறிய நிலையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

'உளவியற் சிந்தனைகள்' நூல் வெளியீடு

வட்டுக்கோட்டை

சித்த மருத்துவ வைத்தியர் வெற்றிவேல் சக்திவேல் எழுதிய 'உளவியற் சிந்தனைகள்' நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை தெற்கு திருஞானசம்பந்தர் பாடசாலை வீதியிலுள்ள மூலிகை சுகவாழ்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலாநிதி சைவப்புலவர் வ.கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அவசர நிலைமைகளை சீர்படுத்துவதில் மின்சார சபையினர் அசமந்தப் போக்கு

வடமராட்சி

வடமராட்சி பிரதேசத்தில் மின்சார சபையினரின் அவசர கால சேவை மிக மந்தமாக உள்ளதாக வடமராட்சிப் பிரதேச மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக அறுந்து விழும் மின்சாரக் கம்பிகள் பற்றி மின்சார சபையினரிடம் உடனுக்குடன் அறிவிக்கின்ற போதும், அவர்கள் வந்து அதைச் சீராக்குவதில் அசமந்தப் போக் கையே காட்டுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மின்சாரம் பாய்ந்து உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால், இலங்கை மின்சார சபையினர் வடமராட்சிப் பிரதேசத்துக்கு அவசரகாலச் சேவைப் பிரிவொன்றை உருவாக்கலாமென ஆலோசனை விடுத்துள்ளனர்.

அண்மையில் மந்திகைப் பகுதியில் வீதியொன்றில் வீடு ஒன்றுக்கு முன்னால் மின்சாரக்கம்பி அறுந்து விழுந்த நிலையில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்த போதும், பலதடவைகள் மின்சாரசபையினருக்கு தகவல் தெரிவித்திருந்தும் அவர்கள் அன்று மாலைவரை வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

வடமராட்சி வர்த்தகர்கள் திங்கட்கிழமை பருத்தித்துறை செயலகம் முன் மறியல்

வடமராட்சி

வடமராட்சி வடக்கு வர்த்தகர்கள் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டுமெனக்கோரி நாளைமறுதினம் திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 11 மாதங்களாகியும் தமக்கு நிவாரணமோ, கடன் வசதிகளோ வழங்கப்படாததை ஆட்சேபித்து இந்த மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

பிரதேச செயலகத்துக்குள் அலுவலகர் எவரையும் செல்லவிடாது காலை முதல் மாலை வரை மறியல்போராட்டம் நடைபெறுமென வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (111)

அகண்ட நாம பஜனை

யாழ்ப்பாணம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாவாவால் பிரகடனப் படுத்தப்பட்ட அகிலஉலக அகண்ட நாமபஜனை யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை பி.ப 6 மணி தொடக்கம் ஞாயிற்றுக் கிழமை பி.ப 6 மணி வரை நடைபெறுவுள்ளது.

தொடர்ச்சியாக இருபத்து நான்கு மணிநேரம் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக நாட்டமுள்ள எவரும் கலந்து கொள்ள முடியும் என நிலையத்தின் ஆன்மீக இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (111)

அதிபர்கள் இடமாற்றம்

உடுவில்

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் ந.சிவகடாட்சம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

மல்வம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபராகவிருந்த சி.பஞ்சாட்சரம் முருகமூர்த்தி வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த இடமாற்றங்கள் கடந்த 3ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (101)

தும்பளை - அம்பன் ஊடான பஸ் சேவைகள் சீரின்மை

சுதுமலை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் மேற்கொள்ளப்படும் தும்பளை - அம்பன் ஊடான பஸ் சேவை சீராக இடம்பெறுவதில்லையென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து காலை 9.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்குமே இந்த பஸ் சேவைகள் இடம் பெற்று வருகின்றன.

அண்மைக்காலமாக நேர மாற்றங்களில் முன் அறிவித்தலின்றி குறிப்பிட்ட இடங்களிலுள்ள தரிப்பிடங்களை பஸ்கள் தாண்டிச்செல்வதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்கள், அரச நிறுவன உத்தியோகத்தர்கள், சாதாரண பொது மக்கள் எனப் பலர் குறிப்பிட்ட பஸ்சைத் தவறவிட்டு கால்நடையாகச் செல்வதாகவும், தமது தேவைகளுக்காகவும், அலுவலகங்களுக்கு உரிய நேரத்துக்குச் செல்ல முடியவில்லை எனவும் பாதிக்கப்படுகின்ற பயணிகள் தெரிவிக் கின்றனர். (91)

கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலையில் இடம்பெற்ற ஸ்தாபகர் சிலை திறப்புவிழாவில் நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா மங்கள விளக்கேற்றுவதையும், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (111)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அககவை இன்று



பெயர் : ச.தர்சிகன்
முகவரி : சாவகச்சேரி.

வாழ்க் வளமுடன்

சீறாரின் பெயர்
முகவரி
பிறந்த ஆண்டு
கூப்பன்களை பத்தில் புகைப்படமும் இக்குடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு வேலணை வர்த்தகர் சங்கம் கோரிக்கை

வேலணை

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை நாம், எமது சுயவிருப்பத்துக்கு இணங்க பகிஷ்கரிப்பது ஒவ்வொரு தமிழ் மகனினதும் தார்மீக கடமையாகும்.

காரணம் -எந்த ஜனாதிபதி வந்தாலும், தமிழ் மக்களுக்கு விமோசனம் ஏற்படப் போவதில்லை.

இவர்கள் தமிழ் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை அளித்து, தமிழ் மக்களை பகடைக் காய்களாக வைத்துக் கொண்டு தங்கள் கதிரைகளைக் கைப்பற்றுகின்றார்கள்.

அத்துடன் சந்தர்ப்பம் வரும் போது அவசரகால சட்டத்தையும் பிரகடனப்படுத்தி, தமிழ் மக்களுக்கு எத்தனையோ இடையூறுகளை ஏற்படுத்துகின்றார்கள்.

ஆகையால் தமிழ் மக்களே தயவு செய்து இந்த ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரித்து எமது ஏகாதிபத்திய கருத்தை வெளிப்படுத்துவோம் என்று கேட்கப்பட்டுள்ளது.

சமூகப் பகுப்பாய்வு

சுதுமலை

அரியாலை கிராமம் சமூகப் பகுப்பாய்வுக்கு கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் உட்படுத்தப்படவுள்ளதாக நிறுவனத்தின் இணைபாளர் எல்.ஜோசப் பாலா தெரிவித்தார்.

நாளை காலை 9.30 மணிக்கு அரியாலை யூதாகோயிலில் இடம்பெறவுள்ள இந்தப் பகுப்பாய்வில் - சமுகத் தேவைகள் இனங்காணப்பட்டு முன்வைக்கப்படவுள்ளன. (91)

குளங்களில் நீர் மாசடையும் அபாயம்

சுதுமலை

கீரிமலை கமநல சேவை விவசாய போதானாசிரியர் பிரிவுக் குட்பட்ட முதலியார் குளம், கிராயக் குளம் ஆகியவற்றில் கழிவுகள் கொட்டப்படுவதால் குளத்து நீர் மாசடைவதுடன், விவசாயிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்துக்குட்பட்ட மேற்படி இரண்டு குளங்களையும் விவசாய சம்மேளனம் அண்மையில் புனரமைப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

போர் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சித்தியடைந்த மாணவருக்கு பாராட்டு

தமிழீழ கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருள்மாஸ்டர்

கிளிநொச்சி

போர் நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வியைக் கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுவதில் தமிழீழ கல்விக் கழகம் மகிழ்வடைகிறது என தமிழீழ கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்ரர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைச் சிறப்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைப்பதற்குப் பெற்றோர்களின் பங்கு முக்கியமாகவுள்ளது.

பொதுவாகவே மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் கூடுதல் அக்கறை செலுத்தல் வேண்டும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அடுத்துவரும் பரீட்சைகளில் சித்தியடைய முடியாமல் தவிக்கின்ற நிலைமையினை நாம் காண்கின்றோம்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து விட்டோம் என சோர்ந்து போகாமல் அடுத்து வரும் பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல மாணவர்கள் முயல வேண்டும்.

இந்தப் பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுவதுடன், மாணவர்களின் வெற்றிக்கு வழி வகுத்த அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் வ. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை இளவேனில் வாணிபப் பொறுப்பாளர் இசைச் செல்வன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, கரைச்சிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி இ.அரியரட்ணம், முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதே வேளை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், நூறு புள்ளிகளுக்குமேல்எடுத்த மாணவர்களுக்கும் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிளி. பாடசாலை அதிபர்களுக்கான சுற்றாடல் முன்னோடிக் கருத்தரங்கு

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான சுற்றாடல் முன்னோடிக்குழு தொடர்பான கருத்தரங்கு கடந்த புதன்கிழமை, கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராஜநாயகம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் இசையமுதன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் நிகழ்த்தினார்.

பாடசாலைக் கல்வியில் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவமும், நடைமுறைப்படுத்துவதிலுள்ள நன்மைகளும் எனும் தலைப்பில் கிளிநொச்சி வலயக் கல்விப பணிப்பாளர் த.குருகுலராஜா உரை நிகழ்த்தினார்.

துணுக்காய் வலயத்தினால் மாணவர்களுக்கு மீட்டல் வகுப்பு

துணுக்காய்

துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரிதமீட்டல் விசேட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மீட்டல் வகுப்புகளில் கணிதம், தமிழ், சமூகக்கல்வி, விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் நடத்தப்படுகின்றன.

ஒட்டு சுட்டான் மகாவித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயம், மல்லாவி மத்தியகல்லூரி ஆகிய நிலையங்களில் நடைபெறும் இவ்வகுப்புகளில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்கான வலயக்கல்வி அலுவலகத்தால் நடாத்தப்படவுள்ள முன்னோடிப் பரீட்சை நாளை மறுதினம் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் தெரிவித்தார்.

சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

வவுனியா

வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த நல்லையா விஜயராசா அவர்கள் வவுனியா நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஓமந்தை மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், செட்டிக்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போது வவுனியா குடியிருப்புக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப செயலாளரும், வவுனியா கார்த்தார் சின்னக்குளம் அ.த.க. பாடசாலையின் ஆசிரியருமாவார். (03)

மின்சார ஊழியர்களுக்கான விடுத்க்கான காணி

கிளிநொச்சி

இலங்கை மின்சாரசபை ஊழியர் விடுதி அமைப்பதற்கான காணி கிளிநொச்சி புதிய நகர திட்ட மத்திய பகுதியில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரியவந்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்துக்கு வழங்கப்பட்ட காணிக்கருகாமையில் இந்த மின்சாரசபை ஊழியர் விடுதி அமைப்பதற்கென ¼ ஏக்கர் காணியை ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கிளிநொச்சி அரசஅதிபர் தி.இராசநாயகம் அவர்கள் கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜிக்கு பணிப் புரை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

பனை அபிவிருத்தி சபையினால் பனம் விதை நடுகைத் திட்டம்

விசுவமடு

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய கல்லாற்று கிராமத்தில் பனை அபிவிருத்திச் சபையின் நிதியுதவியுடன் பனம் விதை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 12 ஆயிரம் பனம்விதைகள் நாட்டி வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை உமையாள் புரம் கிராமத்தில் 20 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன. பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஞானிமடம், சித்தன் குறிச்சி, கறுக்காய் தீவு ஆகிய இடங்களிலும் பனம் விதை நடுகை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இயக்கச்சி , புலோப்பளை, மாசார் ஆகிய கிராமங்களிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்தி சபை இணைப்பாளர் வீ.சே.மாணிக்கம் தெரிவித்துள்ளார்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் புதிய கட்டடம் திறந்துவைக்கப்பட்டது

உருத்திரபுரம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் புதிய அலுவலகக் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் உருத்திரபுரத்தில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கை சிவநகர் கிராமசேவகர் வைத்தீஸ்வர மூர்த்தி ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் ஏற்றி வைத்தார்.

புதிய அலுவலகத்தின் பெயர்ப்பலகையை கிளிநொச்சி மாவட்ட விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் திரை நீக்கம் செய்து வைத்தார். புதிய கட்டடத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் திறந்து வைத்தார். திட்ட இணைப்பாளர் அலுவலகம், நிதிப்பகுதி அலுவலகம், இணைப்பாளர் அலுவலகம் போன்றவற்றை முறையே கணேசபிள்ளை, வணபிதா மதுர நாயகம், அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் றீகன் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் சிறப்புரைகளை அரசியற் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட பலரும் நிகழ்த்தினர்.

முல்லைத்தீவில் மாவீரர் நாளுக்கான ஏற்பாட்டுக் கருத்தரங்கு நிகழ்வுகள்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதற்கான நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்று வருகின்றது. அத்தோடு மாவீரர் நாளைச் சிறப்பாக நடத்துவது சம்பந்தமான கருத்தரங்குகளும் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கருத்தரங்குகள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, மல்லாவி, துணுக்காய், முள்ளியவளை, மாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் இடம்பெற்றன. இந்தக் கருத்தரங்குகளில் மாவீரர் செயற்பாட்டுக்குமுவும் தெரிவு செய்யப்பட்டு இதற்கான ஏற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மாவீரர் துயிலும் இல்லங்களில் தூய்மைப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

காலச் சுவட்டில்...

இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

நவம்பர் - 12

1660 : "பில்கிரிம்ஸ் புறொகிரஸ்" என்ற நூலின் மூலம் பெரும் புகழ் பெற்றவரான ஆங்கில எழுத்தாளர் "ஜான் புன்யன்" அனுமதிப்பத்திரம் பெறாது மதப் பிரசாரம் செய்தமைக்காகக கைது செய்யப்பட்டு 12 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

1841 : யூதர்களுக்கென முதன் முதலாக பிரிட்டனில் "ஜயூஸ் க்ரோனிக்கிள்" என்னும் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது.

1859 : முதன் முதலாக ஜீல்ஸ் லியோடார்ட் என்பவர் பாரிசில் ஒரு சர்க்கஸின்போது பறக்கும் ஊஞ்சலில் ஒரு முனையில் இருந்து இன்னுமொரு முனைக்கு தாவி மக்களை வியக்கவைத்தார்.

1867 : முதன் முதலாக அரசியல் கட்சி ஒன்றின் மாநாடு நடைபெற்றது. லண்டனில் கன்சர் வேடிங் கட்சியே மாநாட்டை நடத்தியது.

1917 : முதன்முதலாக வானொலி மூலம் லெனின்- ரஷ்ய மக்களது ஆதரவைக் கோரினார்.

1919 : லண்டனைச் சேர்ந்த கீத்ஸ்மித் என்பவரும், ராஸ் என்பவரும் விக்கர்ஸ் விமி என்ற விமானத்தில் லண்டனில் இருந்து அவுஸ்ரேலியாவுக்குப் புறப்பட்டனர். 135 மணி நேரம் பறந்து அவுஸ்ரேலியாவைச் சென்றடைந்தனர்.

1920 : அட்ரியாடிக் பிரச்சினைக்குத் தீர்வுகாண இத்தாலியும், யூகோஸ்லேவியாவும் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டன. இந்த உடன்படிக்கைப்படி, இத்தாலி இஸ்டிசியாவையும், யோகோஸ்லேவியாவால்மோஷியாவையும் தங்களது ஆதிக்கத்தின்கீழ் எடுத்துக்கொண்டன.

1921 : ஆயுதக் குறைப்புத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக வல்லரசு நாடுகளின் மகாநாடு வாஷிங்டனில் கூடியது. இந்த மாநாடு 1922.02.06 வரை நடைபெற்றது.

1926 : ஜாவாவில் டச்சு ஆதிக்கத்தை எதிர்த்து தேசியவாதிகளது கிளர்ச்சிகள் ஆரம்பித்தன.

1928 : பிரித்தானியாவில் முதன்முதலாக பேசும்படம் திரையிடுவதற்கு ஏற்ற வகையில் மான்செஸ்ட்ரில் "நியூ ஒக்ஸ்போர்ட் தியேட்டர்" என்னம் திரை அரங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1938 : சீனாவின் ஷாங்ஹா நகரில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீயை 16 ஆம் திகதிதான் அணைக்க முடிந்தது. 200 இற்கும் அதிகமானவர்கள் இறந்துபோயினர்.

* : இந்தியாவில் முதன்முதலாக தபால் தொடர்பான அருங்காட்சியகம் புதுடில்லியில் திறந்துவைக்கப்பட்டது.

1944 : நோர்வேயின் துறைமுகம் ஒன்றில் பல மாதங்களாகப் பதுங்கியிருந்த ஜேர்மனியின் இறுதிப் பெரிய போர்க்கப்பலான "டிர்பிட்ஸ்" என்ற போர்க்கப்பலை பிரித்தானிய குண்டுவீச்சு விமானங்கள் தாக்கியழித்தன.

1951 : மத்திய கிழக்குப் பாதுகாப்புக் கூட்டமைப்பில் தென் ஆபிரிக்கா இணைந்துகொண்டது.

1956 : ஐக்கிய நாடுகள் சபைக்கு சூடான், மொறாக்கோ, டுனிஷியா ஆகிய மூன்று அரபு நாடுகளும் இணைத்துக்கொள்ளப்பட்டன.

1965 : வெள்ளிக்கிரக ஆய்வுக்காக ரஷ்யா வெனீரா - 2 என்னும் விண்கலத்தை ஏவியது. வீனஸ் கிரகத்துக்கு 24000 கி.மீ அருகே சென்ற இந்த விண்கலம் பின்னர் செயலற்றுப் போய்விட்டது.

1980 : 1977 செப்ரெம்பர் 30 ஆம் திகதி ஏவப்பட்ட "வயோஜர் - 1" என்னும் விண்கலம் சனிக்கிரகத்தின் அருகே சென்றடைந்து, இதுவரை அறியப்படாத பல புதிய தகவல்களை அனுப்பிவைத்தது. சனிக்கிரகத்துக்கு ஏழாவது வளையம் இருப்பதையும், சனிக்கோளைச் சுற்றி ஐந்து புதிய நிலாக்கள் சுற்றிவருவது பற்றியும், இவற்றுள் மிமாஸ் என்ற நிலாவிலுள்ள பெரிய குழி ஒன்று 14.5 கி.மீ வரை ஆழமானது எனவும் புதிய தகவல்கள் பலவற்றை பூமிக்கு அனுப்பிவைத்தது.

1981 : அமெரிக்கா எஸ்.டி.எஸ்.2.கொலம்பியா என்னும் விண்வெளி ஓடத்தை இரண்டாவது தடவையாக விண்ணில் ஏவியது. ஒரு விண்கலம் இரண்டாவது தடவையாகவும் விண்ணில் ஏவுவது இதுவே முதல் முறையாகும்.

1984 : இந்தவருடம் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி சாலெஞ்சர் என்ற விண்வெளி ஓடத்தின் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட வெஸ்ட்டர் - 6, பலாப்பா - 2 என்ற செயற்கைக்கோள்கள் செயலற்றுப் போய்விட்டதால், அவற்றை டிஸ்கவரி - 51 ஏ என்ற விண்வெளி ஓடம் பூமிக்கு மீட்டுவந்தது.

1993 : "லண்டன் இண்டர் நேஷனல் மாரி டைம்ஸ்" என்ற அமைப்பு லண்டனில் கதிரியக்கக் கழிவுகள் லண்டன் கடலில் கொட்டப்படுவதைத் தடைசெய்தன.

2001 : 260 பயணிகளுடன் நியூயோர்க்கில் இருந்து புறப்பட்ட அமெரிக்கன் எயார் லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொருங்கியதில் விமானத்தில் இருந்தவர்களுடன் நிலத்தில் இருந்த ஐந்து பேரும் பலியானார்கள்.

தொகுப்பு : - சந்துரு